பட்டத்தரசி

உவமைக்கவிஞர்

சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

பட்டத்தரசி

உவமைக்கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041

விலை : ரூ. 70.00

மொத்தப் பக்கங்கள் : 128

அளவு (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1682

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை–17.

நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர் 'செந்தமிழ்க்
காவலர்' என்றும் விருதுகள் வழங்கிச்
சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டார்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

பதிப்புரை

உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் முதன் முதலில் எழுதிய நூலின் பெயர் 'சாவின் முத்தம்'. அதைத் தொடர்ந்து 'பட்டத்தரசி' 'உதட்டில் உதடு' என சிறு சிறு நூல்கள் வெளிவந்தன.

'சாவின் முத்தம்' என்னும் நூலுக்கு எழுத்து வேந்தர் முல்லை முத்தையா அவர்களும் 'உதட்டில் உதடு' என்னும் நூலுக்கு மூத்த எழுத்தாளர் வாசவன் அவர்களும் பாராட்டு மழை பொழிந்து வாழ்த்தியுள்ளனர்.

உவமைக் கவிஞரின் நூல்கள் அனைத் தையும் அழகுற வெளியிட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக ஓவியப் பாவலர் அமுதோனின் கைவண்ணத்தில் ஒவ்வொறு பக்கத்தையும் ஓவியத்தால் அழகுபடுத்தி வெளியிட்டுள்ளோம்.

அந்தவகையில் சிறு சிறு நூல்களாக வெளி வந்த 'பட்டத்தரசி', 'சாவின் முத்தம்' 'உதட்டில் உதடு' என்ற மூன்று நூல் களையும் ஒன்றாக்கி 'பட்டத்தரசி' என்ற தலைப்பில் இந்த நூலை வெளியிட்டு மகிழ்கிறோம்.

வாழும்போது அனைவரையும் ஊக்கப் படுத்தி உயர்த்திவிட்ட உவமைக் கவிஞரின் எழுத்துக்கள் எல்லோருக்கும் பயன்தரத் தக்கவை இவற்றை நாங்கள் வெளியிடு வதில் பெருமையடைகிறோம்.

மணிவாசகர் பதிப்பகம்



பட்டத்தரசி

உள்ளே...

வாசல்

இவர்கள் சொல்கிறார்கள்

சோலையில் ஓர் நாள்

கவிஞனின் கவலை

ஆயிரம் பொன்

அங்கங்கே

ஆரியத்தின் அச்சம்

தோற்றான் – வென்றாள்

தேய்ந்த கனவு

கூத்தாடி மீசை

வாசல்...

கொடுத்துச் சிவந்த குமணன் கைபோல
மேற்குவான் சிவந்து விளங்கு கின்றது.
பொன்செய் கொல்லர் பொழுதுநிலை அறிந்து,
அடிக்கும் கருவியை ஒடுக்கு கின்றனர்.
ஓலைக் கணக்கரின் வேலைநிற் கின்றது.

சந்தனப் பொதிகை தனைவிட் டெழுந்து
தென்றல், சோலையைத் தேடிவரு கின்றது.
எதிர்பார்த் திருந்த மதுமலர்க் கூட்டம்,
வந்த காற்றுக்கு, மணந்தரு கின்றது.

குருத்து நிலவே! கொல்லிப் பாவையே!
கண்ணே! மணியே! கனியே! சுவையே!
பூவிற் சிறந்த தாமரைப் பூவே!
பாவிற் சிறந்தநே ரிசைவெண் பாவே!

என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்தும்;
கட்டித் தழுவியும்; கனிஇதழ் ஊன்றியும்,
தொட்டும் சுவைத்தும்; தோள்தனில் சாய்ந்தும்,
ஒருவர் நிழலில் ஒருவர் ஒதுங்கி,
இருவரெனும் தோற்றம் இன்றி இருந்து;
இனிமை தனிமையில் தினந்தினம் மகிழும்

காதலர் இருவர் கனிமொழி பேசி
வரிநிழல் வழங்கும் சோலைவரு கின்றனர்,
தலைவன், காமச் சங்கீதம் பாட,
தலைவி, சுவைத்துத் தருகிறாள்; முத்தம்!

அதற்குப் பின்னர், அந்த அணங்கு,
பார்வையால் தூய பளிங்கு காட்டியும்,
காம்பு மூங்கிலைத் தோள்தனில் காட்டியும்,
சின்ன இடைதனில் மின்னல் காட்டியும்,
ஆங்கொரு புறத்தில், காற்றினால் ஆடும்
அஃறிணை மலர்க்கொடி அருகினில் நின்று,
எதிரே நிற்கும் இளமை அழகினை
மாவடுப் பார்வையால் வாருங்கள் என்கிறாள்.

மதிவட்ட முகமும்; புதுமான் விழியும்,
உடையும், இடையும், ஓவியத் தொடையும்,
அல்லிப் பூஇதழ் அளித்திடும் சாயமும்
அணங்கின் முழுஉடல் அழகும்; காதலன்
கண்ணையும் மனத்தையும் கவரு கின்றன.

பாவையைச் சுகிக்கும் பருவக் காதலன்;
தையலின் தளிருடல் சாயலைப் பார்த்து,
மயில்தனை நெஞ்சில் வரவழைக் கின்றான்.
அணங்கின் வாயிதழ், அடிக்கடி திறக்கும்
பதினாறு அரும்புப் பற்களின் நெருக்கம்,
பவளப் பெட்டியில் வைத்த முத்துச்சரம்!
என்று எண்ணி இதயம் குளிர்கிறான்.

கருமணல், மேகம், பாசி, கொன்றைக்
காயொடு மழையிருள் போன்று விளங்கும்
கூந்தலின் வனப்பைக் கூர்ந்து பார்க்கிறான்.

அந்தச் சமயம் அங்கொரு வண்டு
பருவமடைந்த நிருவாண மலரின்
வாயைச் சுவைத்தும்: மதுவுண்டு மயங்கியும்;
பாட்டுப் பாடிப் பறந்துதிரி கின்றது!

வாலிபன் அந்த வண்டினை நோக்கி;
அந்தி மலர்களைச் சந்திக்கும் வண்டே!
பறக்கும் நாவற் பழமே!" நாங்கள்,
மலரைத் தொடுக்கும் மானிடர்; நீயோ;
மலரில் படுத்து மன்மதச் சுவைபெறும்
மரகதச் சோலையின் மருமகப் பிள்ளை!

கத்தூரிக் கறுப்பே! வெண்மையின் எதிர்ப்பே!
அசைந்து நடக்கையில், அன்னம் போலவும்;
எழுந்து நிற்கையில், இளங்கொடி போலவும்;
படுக்கையில் ஓவியப் பாவை போலவும்;
காட்சி தந்திடும் காமச் சித்திரம்!

ஒருவிழி யால்என் உடல்தனைச் சுடுவாள்,
மறுவிழி யாலே, மருந்து போடுவாள்;
அவளே, அணைப்பவள்; சுவைப்பவள்; ஆடை அவிழ்ப்பவள்;
உடலைப் பொருத்தும் நட்பினை உடையவள்.

பூவின் பொடியையும், பொங்குசெந் தேனையும்,
அன்றாடம் நன்குநீ ஆராய்ச்சி செய்கிறாய்;
அதனால், மலர்களின் ஆராய்ச்சி தன்னில்,
உனக்குமேல் அனுபவம் ஒருவர்க்கு மிராது!

ஆதலால், பறக்கும் ஆறுகால் வண்டே!
உன்னிடம் ஒன்று கேட்க நினைக்கிறேன்.
எனது தலையின் இளங்கூந்தல் போல,
மணத்தை வழங்கும் மதுமலர் உண்டோ?
பாட்டை நிறுத்திப் பதில்சொல் வண்டே!

எனது உள்ளம் இனிப்பதற் காகவோ,
இவ்வூ ரினன்யான் என்பதற் காகவோ,
உள்ளத்தில் உள்ளதை, உதட்டால் மாற்றாது;
உண்மை உரைத்திடு, கண்--மை வண்டே!
என்று அந்த, இளைஞன் கேட்கிறான்.
சங்கப் புலவர் தந்துள்ள நூற்களுள்
குறுந்தொகை என்பதும் ஒன்று; சற்றுமுன்
மேலே கூறிய கருத்தினை விளக்கும்
பாட்டு, அந்த ஏட்டில்ஒன் றுள்ளது.
அந்தப் பாட்டு அடியில் வருமாறு:

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே —
இதனை இயற்றியவர் இறையனார் ஆவர்.

தலைவன் ஒருவன், தனது தலைவியின்
மழைக்குழல் வழங்கும் மணத்தைக் குறித்து,
மலர்மீது படியும் வண்டி னிடத்தில்
கேட்பது போல அமைந்து உள்ளது,
அகவல் ஓசையால் ஆனஇப் பாடல்.

பாட்டின் தலைவன் பாண்டியன் வேந்தனா?
சேரனா? சோழனா? செந்தமிழ் வீரனா?
ஆமையின் முதுகில் அரிவாள் தீட்டி,

செந்நெல் அறுவடை செய்யும் உழவனா?
என்பதும், அவன்பெயர் என்ன என்பதும்;
செய்யுள் வரிகள் தெரிவிக்க வில்லை.

மயிலின் சாயலைக் காட்டும் தலைவிக்கு,
எந்தவூர்? அவளுக்கு என்னஎன்பதும், பேர்?
இந்தக் கவிதை எழுத்தினில் இல்லை.

மன்னன் உதட்டினை மதுவினால் கழுவியும்;
அன்னோன் அருகினில் நங்கையை நிறுத்தியும்;
வீரம் ஒடுக்கியும்; மயக்கம் வளர்த்தும்;
பொய்யும் வழுவும் புகுத்திற்று ஆரியம்!

சங்கநா கரிகம் சரிந்து, பின்னர்
இத்தமிழ் நாடு இருட்டில் இருக்கையில்,
குறள்நூல் தூங்க; கீதைத் தத்துவம்,
எல்லோர் நாவிலும் செல்வாக்குப் பெற்றது.

11

புலவரும், பருத்திப் பூணூல் மனிதரும்,
மெய்ப்பொரு ளோடு பொய்ப்பொருள் கூட்டினர்!
பொய்மைக்கு இலக்கியப் புலமைசெல வழிந்தது.

வரலாற்றின் மீது வளர்ந்தது புராணம்
அந்தணச் சாதி ஆயிற்று, வெண்பா!
வஞ்சிப்பா சூத்திர வருணமா யிற்று!

அந்த முறையில், இந்தக் குறுந்தொகைப்
பாடலும் ஒருவனால் புராணமா யிற்று!
பிழைப்பைக் கருதி, பிழைபுரிந்து விட்டான்,
ஆரியத் தமிழன், அறிவு இருண்டவன்.

அகச்சுவை எண்ணம் அளிக்கும்இப் பாடலை
புராண மாக்குமுன் இந்தப் புலவன்,
மதுரையை நினைக்கிறான்; பாண்டியன் முளைக்கிறான்.
பாண்டியன் முளைத்ததும், சங்கம் வருகின்றது!
சங்கம் வந்ததும், பின்னர் நக்கீரச்
சிங்கம் வருகிறான்; திரும்பவும் நினைக்கிறான்
தருமி என்னும் தரித்திரப் பார்ப்பன
இளைஞனைக் கதையில் இணைத்து வைக்கிறான்.

இயற்கையில் கூந்தலுக் கில்லை வாசம்
மங்கையர் குழலுக்கு மாமணம் உண்டு—
வாதிப் பிரதி வாதி போல,
இரண்டு பிளவுகள் — நேரெதிர் நினைவுகள்!
இந்தஎண் ணங்களை இழுத்துச் சேர்க்கிறான்.

கற்கண்டுப் பாடலை இயற்றிய கவிஞர்
இறையனார் தன்னை இறைவனாக்கு கின்றான்.

சக்ர வர்த்தித் திருமகன் இராமனை
வான்மீகி, ஆண்டவன் ஆக்க வில்லை
கம்பனோ, இராமனைக் கடவுளாக்கினான்

வான்மீகி என்ற மானிடக் கவிஞன்,
தவறு செய்யாத சரித்திரக் காரன்!
இந்நாட்டுக் கம்பனோ எழுத்துத் தரகன்!

சங்க காலத்துத் தமிழன் எழுத்தில்,
சாதிகள் இல்லை, சடங்கு கிடையாது.
மனிதரைப் பிரிக்கும் மதங்களைக் காணோம்!
அவர்கள் கவிதையில் வருகின்ற ஆடவன்,
பூவைச் சூடுவான்! பிறைசூட மாட்டான்.
வெண்மை நிலவுக்கு விண்தான் வீடு,
ஆண்டவன் முடிக்கு அதுஎப் படிவரும்?

நலந்தரும் காவிரி முதலிய நதிகள்,
தரையில் இருக்கும், தலையில் இராது.
பசலை நிலாவரும்! பனிதரும்; அந்நிலா,
குளிர்ந்த வானைக் கொப்புளப் படுத்தும்!
பருதி உதித்திடும் பகற்பொழுது தன்னை,
இரவுப்புறம் – என்று எழுதினர் முன்னோர்.
சூரியப் பிரசவம் என்றனர், பின்னோர்!

இறகுகள் மலைக்கு இருந்தன என்றும்;
யானை மலரெடுத்து அர்ச்சித்த தாகவும்,
நக்கீரன் நாட்கள் எழுதவே இல்லை!
புராண நூற்றாண்டே புரிந்தது இப்பிழை!

திருவிளையாடல் செய்திக் கதைப்படி;
பைந்தமிழ்க் குறுந்தொகைப் பாட்டுடைத் தலைவன்
மன்னன் செண்பக மாறனாம்! அந்தக்
கொற்றவன் தலைவிதான் கோப்பெருந் தேவியாம்!
தந்தையும் பெற்ற தாயும் இல்லாத,
தரித்திரப் பார்ப்பான் தருமி என்பவன்
மதுரைச் சோம சுந்தரனிடத்தில்,
இனிக்கும் திருமணம் இன்றி தவிக்கிறேன்;
பரிசுச் செய்யுள் பாடித் தருவீர்—
என்று கேட்கிறான், ஆலயம் வந்து!
கேட்பவன் ஆரியன்! தமிழன் அல்லன்!
அருள்புரி கின்றான் நெற்றிக்கண் ஆண்டவன்.

பார்ப்பனன் கேட்க பார்ப்பன பகவான்,
ஏதும் கூறாது எழுதித் தருகிறாள்.
இங்கே "அவாளின்" இனத்தின் உணர்ச்சி
இலைமறை காயென இருக்கின்ற தல்லவா?

மதுரைச் சொக்க நாதன் என்பவன்
அந்நாள் ஆரியர்க்கு ஆச்சாரி யாக
இருந்து இருப்பான் என்று நினைக்கிறேன்.
இல்லையேல், மதுரை இறைவன் தருமிக்கு
இவ்வளவு பரிவு ஏன் காட்ட வேண்டும்?

பாடலைத் தந்த பார்வதிக் கணவன்;
பரிசு பெற்றிடப் பாடலும், நீயோர்
அணங்கை மணந்திட ஆயிரம் பொன்னும்,
வேண்டுவ தெல்லாம்வேண்டாம் அம்பி.

நேரடி உனக்கு நன்மை செய்கிறேன்,
கொஞ்ச நேரம் பொறுஎன்று கூறி....

நீலவானத்து நிலவின் வடிவையும்
கொம்பைத் தழுவும் கொடியின் வளைவையும்,
புல்நடுக் கத்தையும்; பூவின்மென் மையையும்;
செங்கதிர் ஒளியையும், பனிநீர்த் துளியையும்;

காற்றின் சஞ்சலத் தன்மை தன்னையும்;
முயலின்கூச் சத்தையும், மயிலின் செருக்கையும்;
கூவுங் குயிலின் குரலையும்; இவற்றொடு,
வைரக் கல்லின் உறுதி – மலர்தரும்
தேனின் இனிமை – தீயின் வெப்பம்
மானின் மருட்சி இவற்றையும் சேர்த்து.

பெண்உரு என்று படைத்து, ஈசன்;
இந்த மணமகள், இவளை மாலை
இட்டு 'ஆரிய இல்லறம் நடத்துக,'
என்றுஏன் உதவி இருத்தல் கூடாது?
எல்லாம் செய்ய வல்ல சித்தர்க்கு
இதுஒரு பெரிதா பக்தி மான்களே?

யானையின் தலைபோல் அமைந்த சங்கை
கீர்கீர் என்னும் கீரனே என்கிறான்;
வாதம் புரிந்திட வந்த இறைவன்.

சங்கு அறுத்துப் பிழைப்ப தெம்குலம்,
சங்கர னார்க்கு ஏதப்பா குலம்?
என்றுநக் கீரன் எதிர்த்துக் கேட்கிறான்;
அஞ்சாத வீரத் தமிழன் ஆதலால்!

பொருட்குற்றம் உடையது பாடல் என்கிறான்.
நாவில் வல்ல நற்றமிழ்க் கீரன்.

இந்தநக் கீரனுக் கின்னும் சரியாய்
இலக்கண விளக்கம் ஏற்படவில்லை.
ஆதலால், இவனுக்கு அகத்தியனைக் கொண்டு
“பொருளிலக் கணத்தைப் போதனை செய்யச்
சொல்ல வேண்டும் "என்று, சொல்கிறான்;
பார்வதி மாதிடம், பஞ்சாங்கக் கடவுள்!

மறுத்து வாதிட வல்லமை இருந்திடில்
இல்லை, இல்லை! இதுதான் உண்மை!
என்று நிலைநாட்டி இருத்தல் வேண்டாமா?
தாஆ னாட்டித் தனாது நிறுப்பே–
எனுசூத் திரப்படி, இந்த முண்டம்?

பொருளி லக்கணம் புரியாதாம் அவனுக்கு;
சுருக்கவிழ்ந்து குடுமிச் சொக்க நாதன்
அளக்கிறான் ஆரியப் பார்வதி இடத்தில்

பெரியார் அவர்கட்கு, அறிவோ ஆற்றலோ,
இல்லை என்று இயம்புதல் போலவும்;
அறிஞர் அண்ணா அவர்கட்குப் பேசத்
தெரியாது என்று தெரிவித்தல் போலவும்;

கொடுவாள் தன்னை எட்டா என்று
பாடிய புரட்சிக் கவிஞர்க்குக் கவிதை
எழுதத் தெரியாது என்பது போலவும்;
இருக்கின்ற தன்றோ இவன்வாய்ச் சொற்கள்!

நீரிலே அந்தக் கீரனை நிறுத்தி,
கோயில் மனிதனைக் கும்பிட வைத்து,
கோபப் பிரசாத மெனும்பிர பந்தம்
பாட வைக்கிறான் பண்டிதப் புலவன்!

எவ்வளவு மாற்றம்! எவ்வளவு புளுகு!

குறுந்தொகைப் பாடல், திருவிளை யாடலாய்
ஆகும் போது; அந்தச் செய்யுள்,
பட்டத் தரசி ஆனால் என்ன?

கலைஞர் கருணா நிதியார் நடத்தும்
முரசொலி இதழில் முன்பே, ஒருமுறை
வந்து உள்ளது, இந்தக் கவிதை

எனது கவிதைகள் இவ்வளவு தூரம்
பரவுவ தற்குப் பழைய நண்பர்
கருணா நிதியே காரண மாவார்.
அவருக்கு எனது ஆயிரம் நன்றி!

சென்னை
15–7–1956
முதற் பதிப்பின் முன்னுரை

சுரதா

இவர்கள் சொல்கிறார்கள்

ஊரறிந்த பேரறிஞர்; புலவர்; நீங்கள்
உயிரெழுத்தைச் சமயத்தில் மறந்து போவீர் — *பாண்டியன்*

பதருள்ள பக்கத்தில் தமிழன்; செந்நெல்
பட்டறையின் பக்கத்தில் பூணூல் பார்ப்பான் — *நக்கீரன்*

ஊர்க்கெடுப்போம்; இது நமது வாழ்க்கை வேலை!
உலைவைப்போம் இது நமக்குச் சுலபம்; ஆனால்
ஏர்பிடித்து உழுவதற்கா தெரியும் — *பரமசிவன்*

எரிந்துவரும் விறகன்றோ பொருளில் லாது
இன்னலிலே வாடுகின்ற இளமைக் காலம் — *பார்வதி*

சோலையில் ஓர்நாள்

கூடுகட்டத் தெரியாத குயிலின் கூட்டம்
கூவுகின்ற சோலைதனில் உலவிக் கொண்டே,
பாடுவதும்; ஆங்குள்ள அழகை, உற்றுப்
பார்ப்பதுவு மாயிருந்தான் பாண்டி வேந்தன்.
காடுபடு திரவியங்கள் ஐந்துள் ஒன்றைக்
கண்டெடுத்தேன் பாருங்கள் – என்று கூறி,
ஆடுமயில் இறகுதனைக் காட்டிக் கொண்டே
அவனருகில் பட்டத்து அரசி வந்தாள்!

சிங்கத்து ஆசனத்தில் செங்கோல் ஏந்தி
தேசத்தை அரசாள்வோன்; அவளை நோக்கி
செங்கரும்பு போல்உனது அங்க மெங்கும்
தித்திப்பு வைத்திருக்கும் பெண்ணே! மாதர்
சங்குநிறப் புன்னகையைக் கண்டால், கொம்பை
தழுவும்வெண் முல்லைகளும், மலரும் என்பர்.
மங்கையர்கள், மாமரத்தைக் கூர்ந்து பார்த்தால்,
மாமரமே பூத்திடுமாம், மெய்யா? பொய்யா?

எங்கேநீ மரத்தைப்பார்; உன்னைக் கொஞ்ச
எதிர்பார்க்கும் என்னைப்பார் – என்றுகூறி
தங்கநிற அங்கத்தைத் தொட்டான், தொட்ட
தமிழரசன் உதடுதனை உதட்டால் தொட்டாள்!
தொங்குகின்ற கூந்தல்தனை எடுத்து, வேந்தன்
தோள்மீது விட்டெறிந்தாள்; பிடித்தான் மன்னன்.
சிங்காரப் பூங்குழலில் பிறந்த வாசம்
சிந்தனையில் ஆழ்த்திற்று; மௌன மானான்!

தென்றலினால் மேலாடைநழுவ, அந்தத்
தேர்வேந்தன் கரம்பட்டு முழுதும் நீங்க,
இன்பத்தின் முதற்கட்டம் முடித்து நின்ற,
ஈரநிலா வதனத்தாள், அவனை நோக்கி;
பொன்மலையே! நான் தழுவும் சிலையே! ஏனோ
பூரிக்கும் போதிந்த மௌனம்? – என்றாள்.
இன்னமுதே! மங்கையரின் கூந்த லுக்கு,
இயற்கையிலே மணம் உண்டா? – என்று கேட்டான்.

பெருங்கவிஞர் சபைகூட்டித் தமிழைக் காக்கும்
பேரரசன் இவ்வாறு அவளைக் கேட்க
நிருவாணச் சுவைஇன்பம் அனுப விக்கும்
நிலாஈர நேரத்தில், கூந்தல் பற்றி,
விரிவாக ஆராய்வோம்; எனக்கிப் போது,
வேண்டுவது, 'காதலரின் கதைகள்' – என்றாள்.
அரசாள்வோன் கதை சொன்னான்; அணங்கு கேட்டாள்;
அந்திவெயில் முற்றிற்று! எழுந்தார், சென்றார்.

❀

கவிஞனின் கவலை

அதிவேக மாய்ஓடும் குதிரை தன்னை
அரபியர்கள் நம்நாட்டுக் கனுப்பு கின்றார்.
மதுக்கலசம், கண்ணாடி, மயிலின் தோகை,
மற்றவர்கள் அனுப்புகின்றார்; வடக்கு வேந்தன்,
பொதியமலைச் சந்தனத்தை அரைப்ப தற்குப்
புதுவட்டக் கல்லனுப்பி, எச்சில் முத்தம்
பதிவாக்கப் பெண்டிரையும் அனுப்பு கின்றான்
பாண்டியன்அத் தூண்டிலுக்கு மீனா கின்றான்.

பார்ப்பனர்கள் நம் நாட்டில் நுழைந்து, எல்லாப்
பதவியையும் கைப்பற்றிக் கொண்டு, நம்மை
வேர்பறித்து வருகின்றார். இந்த சூழ்ச்சி
வேந்தனுக்குத் தெரியாது; உணர்த்தி னாலும்,
நீர்மீது கொள்ளிதனை வைத்தல் போன்ற
நிலையேதான் நிச்சயமாய் ஆகும். இந்த
ஊர்மக்கள் உயிரற்ற கற்கள்! நாட்டு
உணர்ச்சியில்லை, தமிழர்க்கு எழுச்சி இல்லை!

கிளிஞ்சிக்குள் வெண்முத்து வைத்து மூடிக்
கிலுகிலுப்பை போல்ஆட்டும் மதுரை மூதூர்,
அளித்துள்ள செல்வத்தை, பிழைக்க வந்தோர்
அனுபவிக்க விட்டுவிட்டோம்; வீழ்ச்சி யுற்றோம்;
தளர்ந்துள்ளோம்; தாழ்ந்துள்ளோம்; சங்க காலத்
தமிழ்வாழ்வை மறந்துள்ளோம்; இதனை நாட்டில்
விளக்குகின்றோம்; எழுதுகின்றோம்; பேசு கின்றோம்;
வேண்டுமென்று நம்மவனே எதிர்க்கின் றானே!

இளம்பருவம் உடையவர்கள். தம்மு டம்பின்,
எடைபார்க்க முயல்கின்றார் அன்றி, நன்கு
வளர்ந்துளதா நம்மறிவு? நேற்றைக் கின்று,
வாழ்வினிலே உயர்ந்தோமா? வாழ்ந்த வாழ்வு
வளைவானேன்? என ஆய்ந்து பார்த்து, தக்க
வகைதேட ஓர்இளைஞன் நாட்டில் இல்லை!
விளையாட்டு மந்திரிகள்; மயங்கும் மன்னன்;
வேதியரின் காலடியைக் கழுவும் மக்கள்!

மதம் வேண்டும் என்கின்றார்; மதமா வேண்டும்?
மதிவேண்டும்; மதிவளர்க்கும் கல்வி வேண்டும்;
சதமல்ல வாம்வாழ்வு! சதமா அல்ல?
சதமல்ல என்பவர்க்கேன் வீடு வாசல்?
பதருள்ள பக்கத்தில் தமிழன்! செந்நெல்
பட்டறையின் பக்கத்தில் பூணூல் பார்ப்பான்!
இது சரியா? இது நெறியா? இருக்க லாமா?
எனக்கேட்க ஆள்ஏது நம்மை அன்றி?

இவ்வாறு மைத்துனனைப் பார்த்து, ஓர்நாள்
எடுத்துரைத்தான் நக்கீரன்; அன்னோன் கேட்டு,
எவ்வியென்போன் கொடையாலும்; தந்து மாறன்
என்பவனின் புகழாலும் சிறந்த நாட்டை,
இவ்வாறு சீர்குலைத்தக் கயவர் தம்மை
இப்போதே சாக்காட்டுக் கனுப்ப வேண்டும்.
அவ்வாறு செய்தாற்றான் மீள்வோம்; இன்றேல்
அனைவருமே விலங்கடிமை ஆக நேரும்.

என்றிட்டான் ஆவேச உணர்ச்சியோடு.
இதைக்கேட்ட நக்கீரன் அவனை நோக்கி;
உன்னைப்போல் பேரெழுச்சி உடையோன், நாட்டில்
ஒருவீதிக் கொருதமிழன் இருந்தாற் போதும்.
குன்றுதனை தகர்த்தெறிய உளிகள் வேண்டும்,
கொல்லும் நோய் தனைக்கொல்ல, மருந்து வேண்டும்;
இன்றில்லை மருந்து – உளி இரண்டும்; அம்பு
இல்லாமல் வில்லெடுத்துப் பயன்யா– தென்றான்.

எழுதாத தாமரைப்பூ, கீரன் கொஞ்சும்,
இளம்மனைவி, அங்குவரக் கண்டு, அந்தப்
பழக்குலைமேல் பார்வைதனை அனுப்ப; அன்னோன்
பார்வைதனைப் பார்வையினால் வாங்கிக் கொண்டாள்.
மழைபோன்ற குளிர்முத்தம் தின்றி ருப்பான்
மைத்துனன் அங்கில்லாது இருந்தி ருந்தால்!
எழில்நிறமே! சிற்றுண்டி கொணர்க – என்றான்.
இனிமேல்தான் செய்தாக வேண்டும் – என்றாள்.

இன் சுவையே! எங்கள் இருவர்க்கு மட்டும்
ஏதேனும் சிற்றுண்டி செய்க – என்றான்.
என்வயிற்றுக் கென்செய்வேன் – என்று, அந்த
இலவம்பூ வாயழகி அவனைக் கேட்க;
தின்னுதற்கா உனக்கொன்றும் இல்லை; நீதான்
தினந்தோறும் புளி, சாம்பல், தின்கின் றாயே.
என்றிட்டான் நக்கீரக் கவிஞன், அன்னோன்
இதழ்விரிவு, வரிச்சிரிப்பு வழங்கிற் றாங்கே!

சித்திரத்தை ஒத்திருக்கும் மங்கை, கீரன்
தேனுதட்டின் உட்கருத்தைப் புரிந்து கொண்டு.
முத்துப்பல், கரும்புச்சொல், இரண்டும் தந்தாள்–
முதுபுலவன், விடைபெற்று வெளியே சென்றான்.
அத்தானை வெல்லுகின்ற அறிஞன், இன்று
ஆருமில்லை, தமிழ்நாட்டில் அக்கா – என்றான்.
சித்திரைக்குப் பின்பாரேன், என்வ யிற்றின்
சிரஞ்சீவி பிறந்தவுடன் – என்றாள் நங்கை

ஆசையொடு இவ்வாறு தமக்கை சொல்ல,
அதைக்கேட்ட பின்அன்னோன் உள்ளே செல்ல
வாசமலர்க் கூடையொடு, கீரன் வீட்டு
வாசலிலே வந்தொருத்தி, 'அம்மா' என்றாள்.
பூசைக்கோ, சாமிக்கோ, இதுநாள் மட்டும்
பூவாங்கி அறியாத அந்த நங்கை,
ஆசைக்கும், மஞ்சத்தில் தெளிப்ப தற்கும்,
அவளிடத்தில் அழகுமலர் வாங்க லுற்றாள்.

ஆயிரம் பொன்

அரசனொரு பக்கத்தில்; அன்னோன் பக்கம்,
ஆரணிப்பொன் ஆசனங்கள்; அதில மைச்சர்;
விரல்தடவி யாழ்மீட்டும் பாணன் ஓர்பால்;
வேய்ங்குழலின் மீதுள்ள துளையைப் போல,
வரிசையோடு அமர்ந்தபடி புலவர்க் கூட்டம்;
மன்றத்துச் சேவகர்கள், தூணுக்குத் தூண்.
மரக்கொம்பில் தொங்கும்ஓர் கனியைப் போல,
மண்டபத்தின் உச்சியிலே, தூங்கும் செம்பொன்!

சீர்பாடி னான்ஒருவன்; பாண்டி வேந்தன்
செயம்பாடி னான்ஒருவன்; கலிவெண் பாவால்!
தேர்பாடி னான்ஒருவன்; பின்னர், முல்லைத்
தினைபாடி னான்ஒருவன்; வைகை யாற்று,
நீர்பாடி னான் ஒருவன்; போரில் வென்ற
நிலைபாடி னான்ஒருவன்; கடவுள் மீது,
ஓர்பதிகம் பலர்பாட, முடிவில், கீரன்;
உயர்தமிழே! தாய்ப்பாலே! வாழ்க! — என்றான்.

அரசாள்வோன் முன்னமர்ந்தான் பின்ன மர்ந்தார்
ஆங்குள்ளோர், ஆசனத்தில்! மன்னன் அந்த,
பெரும்புலவன்; தமிழ்ச்சங்கத் தலைவன்; வெல்லும்
பேச்சறிந்த நக்கீரன் தன்னை நோக்க;
வரிவேங்கைப் புலிமன்னன் குறிப்ப றிந்து,
வாடாத பேரறிஞன் சபையை நோக்கி,
தரைமெச்சும் புலவர்களே! – என்றான் கீரன்
தமிழ்மெச்சும் புலவரெலாம் அவனைப் பார்த்தார்.

கடவுளுக்கு நம்மைப்போல் உருவம் உண்டா?
கண்ணுக்கா? மனத்திற்கா? காட்சி இன்பம்?
உடையாத கண்ணாடி; நெய்யா ஆடை;
உலகிலுண்டா? பறப்பதெது? இறகா? காலா?
படைப்பு எது? எனநம்மை நேற்றுக் கேட்ட
பார்த்திபர்க்கு, இப்போதோர் பெருஞ் சந்தேகம்;
இடைதுவளும் ஏந்திழையார் கூந்தலுக்கு,
இயற்கையிலே மணமுண்டா? இதுதான் கேள்வி?

வேள்வியிலே வளர்ந்தவர்கள், பழமை யான
வேதத்தைப் போற்றிடுவர், ஆனால் நாமோ
கேள்வியிலே வளர்ந்தவர்கள்; நமக்கோ, நல்ல
கேள்விகளே; பலாச்சுளைகள், பருகும் செந்தேன்!
நாள்கிழமை தனில்இல்லை, மனிதன் வெற்றி,
நன்றாக உழையுங்கள் சிந்தி யுங்கள்;
ஆள்பவரின் ஐயத்தைத் தீர்த்து வைத்தால்,
ஆயிரம்பொன், வென்றவர்க்கு வந்து சேரும்!

இறப்பதுவும் பிறப்பதுவும்; வையந் தன்னில்,
எல்லோர்க்கும் பொதுநிகழ்ச்சி; மனிதன் வாழ்வில்;
திறமைகள்தான் உண்மைவர லாறு ஆகும்.
சென்றதிசை, நின்றவிடம், மண்ணில், விண்ணில்,
இறவாத புகழ்வைத்தல் வேண்டும். வாழ்வு,
இனிப்பதற்கும், சிறப்பதற்கும், செல்வம் வேண்டும்.
மறந்துவிடக் கூடியதா இந்த எண்ணம்?
மறுநாள்யாம் சந்திப்போம், – என்றான் கீரன்

❀

அங்கங்கே

பாண்டியனின் பொன்முடிப்பு விளக்கந் தன்னைப்
பறைசாற்றிக் கொண்டொருவன் சென்றான். நாட்டில்,
தூண்டுகின்றான் தமிழுணர்ச்சி நமது பாண்டித்
துரைத்தேவன் என்றிட்டார்– செய்தி கேட்டோர்.
நீண்டநிழல் போல்தொடரும் வறுமை தன்னை;
நிச்சயமாய்ப் புலவரெலாம் துரத்து தற்கு,
ஆண்டாண்டு தோறும் நாடாள்வோன் நெஞ்சில்,
ஐயங்கள் அதிகரிக்க வேண்டும்–என்றார்.

தின்பண்டச் சிறுவர்களைப் பார்த்துக் கேட்கும்
சிறுகேள்வி! இதற்கா ஓர் ஆயிரம் பொன்!
நன்றுநன்று! மன்னவனின் ஐயம்," என்று
நடுவீதி தனிலிருவர் பேசிக் கொண்டார்.
மன்றத்தில் பரிசுபெற, மேகம் சிந்தும்
மழைத்துளிபோல் கணக்கற்றோர் வருவர்; செய்யுள்
ஒன்றுக்குத் தான்பரிசு! தோற்ற பாடல்,
ஊர்நோக்கித் தோல்வியொடு திரும்பும்' என்றார்.

கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டு, என்று
கூறுகின்றார் என்கணவர்– என்றாள் ஓர்பெண்;
வேந்தனது போட்டிதனில் கலந்து கொள்வார்
வீட்டரசர் நாளைக்கு' என்றாள் ஓர்பெண்
மாந்தளிரே; இதழ்எங்கே? என்று கேட்கும்
மணவாளர், கூந்தல்தனைக் கேட்டார்– என்று
சாந்தணிந்த மலைவஞ்சி என்னும் மங்கை;
தனம்எனும் தையலிடம் எடுத்து ரைத்தாள்.

ஆரியத்தின் அச்சம்

விதவிதமாய் ஆபரணம்; அதுபோல் ஆடை;
வேளைக்கு ஓர்உணவு; உண்டு வாழும்
எதிர்வீட்டு இந்துமதி போல, யானும்
இன்பத்தை அடைவேனா, வாழ்வில்? என்று,
மதுவோநல் மணமோ இவ்விரண்டும் இல்லா,
மலர்போன்ற பார்வதியாள் ஏங்கும் போது,
அதிகாரக் குரலோடு அவளை, மிக்க
அவசரமாய்ப் பரமசிவன் அழைக்க லுற்றான்.

எதற்காக அழைத்தீர்கள்? – என்று கேட்டு
ஏந்திழையாள் சுளித்தமுகத் தோடு வந்தாள்.
புதுப்பொன்னே!– என்றிட்டான். ஆமாம், அந்தப்
பொன்னெல்லாம் பேச்சில்தான்; செயலில் இல்லை
அதிகாரச் சத்தந்தான் வீட்டில், கேட்ட
ஆபரணம் அத்தனையும் கடையில்; வையம்
மதிக்கின்ற நிதியில்லை; நமது வாழ்வோ
மழையிருட்டு; அதில் மின்னல் கூட இல்லை!

விருந்துண்டு வாழ்பவர்கள், தாங்கள் உண்ட
விருந்துணவு செரிமான மாவ தற்கு
மருந்துண்டு வருகின்றார். ஏழை மக்கள்
வயிற்றுக்குள் நல்லபசி இருந்தும்; உண்ண
ஒரு கவளம் சோறின்றித் தவிக்கின் றார்கள்.
உண்மையிலே இங்கேயும் இதுதான்! தீயில்;
எரிந்துவரும் விறகன்றோ, பொருளில் லாது
ஏங்கிதினம் வாடுகின்ற இளமைக் காலம்!

சித்திரமே! உனக்கில்லா நகையா; இன்னும்,
சிலமாதம் செல்லட்டும் என்றீர். ஆனால்
எத்தனையோ தடவை இதுபோலச் சொல்லி
ஏமாற்றி விட்டீர்கள் என்னை! கொஞ்சி
முத்தமிடும் போதுமட்டும் ஆசை வார்த்தை
மொழிகின்றீர்; அதுவன்றி இதுநாள் மட்டும்
சத்தமிட்டுப் பயனென்ன? எனது எண்ணம்,
சாகும்வரை நிறைவேறப் போவ தில்லை.

கிழவயது, குரங்கழகு, உடையோர் கூட;
கிளிச்சிறைப்பொன் ஆபரணம் அணியுங் காலம்.
பழக்கூடை! பருவமலர்! போன்ற உங்கள்
பத்தினிக்கோ, மூக்குத்தி கூட இல்லை.
தழைத்துள்ள புன்னை மலர் அரும்பை யேனும்
தந்திடுங்கள் மூக்குத்தி என்று! விண்மீன்;
விழுந்தாலும் அதனை ஒரு மாலை யாக்கி
விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வேன்— என்றாள்.

காலுக்கு மேலேஓர் விரியன் பாம்பு,
கடித்தபடி இருக்கின்ற காட்சி போல;
சேலைமலைத் தேன்பூவே! உனது காலில்
சிலம்பிருந்தால், நீ நடக்கும் போது பாடும்.
மாலையிட்ட உன்கழுத்தில், அழகு முத்து
மாலையிட்டால், அம்மாலை; நீயும் நானும்,
நீலஇருள் உண்டாக்கி இன்பங் காணும்
நேரத்தில் உறுத்திடினும், வலித்தி டாது?

கரும்புரசம் போல்இனித்து, மருந்து போலக்
கணக்காக வடிக்குஞ்சொல் வழங்கும் மாதே!
பருவத்தால், பழஉதட்டால், பார்வை தன்னைப்
பசியெடுக்க வைத்துவரும் அழகால், ஒவ்வோர்
இரவினிலும் எனைஇனிக்க வைக்கும் போது;
ஏதேதோ கேட்கின்றாய், ஆசை யோடு.
குருத்துநிகர்ப் பட்டுடையும், நகையும் வாங்கிக்
கொடுக்கத்தான் எனக்காசை, என்ன செய்வேன்?

கல்லெடுத்து நட்டுவைக்கச் சொல்லிச் சொல்லிக்
கடவுளென நம்பவைத்துப் பிழைத்து வந்தோம்.
புல்லெடுத்தோம்; தமிழ்நூலில் நெருப்பு வைத்தோம்;
புவிவேந்தன் முன், பெண்ணின் முகத்தை வைத்தோம்.
வில்லெடுத்த ஏகலைவன் என்போன், கட்டை
விரலெடுத்த நம்மரபின் சூழ்ச்சி தன்னை,
எல்லோரும் நன்குணர்ந்து விட்டார்; முன்போல்
ஏய்க்கமுயன் றால் முதுகு வீங்கிப் போகும்!

ஊர்கெடுப்போம்; இது நமது வாழ்க்கை வேலை!
உலைவைப்போம்; இதுநமக்குச் சுலபம்! ஆனால்,
ஏர்பிடித்து உழுவதற்கா தெரியும்? ஏதோ,
இந்நாட்டுத் தமிழரைப்போல் நடிக்கின் றோம்நாம்.
நீர்மீனைத் தின்றுவந்தோம், ராமன் நாளில்.
நிலையறிந்து, தமிழ்ச்சைவம் பேசு கின்றோம்.
தேர்ந்தெடுத்த மயிலழகே! நாட்டின் மாற்றம்
தெரியாமல் பேசுகின்றாய்— என்று சொன்னான்.

வருத்தத்தைப் பங்கிட்டு; விழியில், நெஞ்சில்
வதனத்தின் மேற்புறத்தில், வைத்துக் கொண்டு;
இருந்திட்டார் மௌனத்தில் இரண்டு பேரும்.
இருக்கையிலே, முரசுதந்த ஒலியைக் கேட்டார்.
சரியான விடைதந்தால், ஆயி ரம்பொன்
தரப்படுமாம் எனவந்து மைந்தன் சொன்னான்.
விரைவாகப் பாட்டெழுதி முடித்தான் தந்தை
வேந்தனிடம், செய்யுளொடு சென்றான், பிள்ளை.

❀

தோற்றான் வென்றான்

காதலுக்குப் பஞ்சமில்லை நாட்டில்; ஆனால்
கல்விக்குத் தான் பஞ்சம்; இல்லா விட்டால்,
பேதையர்போல் இருப்பாரோ? விடையைக் கூறிப்
பெற்றிருக்க மாட்டாரோ பரிசு? விண்ணில்
மாதத்திற் கோர்தடவை மரண மாகும்
வட்டநிலா இரண்டுமுறை இருண்டும், நாட்டில்
மேதையெனப் பேர்பெற்ற நீங்கள் கூட
விழிக்கின்றீர், விடைகூற முடிய வில்லை!

ஊரறிந்த பேரறிஞர்; புலவர்; நீவிர்
உயிரெழுத்தைச் சமயத்தில் மறந்து போவீர்!
பேரறிவு பெற்றிருக்கும் உம்மைப் போன்ற
பெரியோர்க்கு மறதிமிக அதிகம் அன்றோ?
நீரினிலே முகம்பார்க்கும் அழுக்கு வெள்ளை
நிலவுதனை யாம்பிடிப்போம், என்னும் நீங்கள்;
கூரைதனில் உட்கார்ந்து இருக்கும் சிட்டுக்
குருவிதனைப் பிடிப்பதற்கு முடிய வில்லை.

தனதத்தர் நுரைஎன்றால் என்ன? என்றார்;
தண்ணீரின் நோய் என்றீர்– புகழப் பட்டீர்.
சினத்திற்கோர் விளக்கம்யான் கேட்ட போது
சிறுபொழுதுப் பைத்தியந்தான் கோபம் என்றீர்.
இனிமைதனிற் சிறந்ததெது, தமிழா? பெண்ணின்
இதழ்ப்பழமா? எனக்கேட்டேன்– எண்ணம் சொன்னீர்.
தினந்தோறும் இதுபோல்என் ஐயந் தன்னைத்
தீர்ப்போர்க்கு இதைத்தீர்க்க முடிய வில்லை!

ஆர்ப்பரித்தான் இவ்வாறு அரசன்; கற்றோர்
அனைவரையும் பார்த்தபடி மன்றந் தன்னில்.
பார்ப்பானின் மூத்தமகன் அங்கே வந்துப்
பாடல்தனை வேந்தனிடம் தந்து நின்றான்.
தேர்வேந்தன் வாசித்தான்; சபையில் உள்ளோர்,
செம்பொன்னைத் தருமியிடம் தருவீர்– என்றார்
பேர்வாய்ந்த நக்கீரன் மட்டும், பாடல்
பிழையுளது, கொடுக்காதீர் பொன்னை– என்றான்.

கொங்குதேர்வாழ்க் கைஎன்னும் செய்யுள் தன்னில்
குறைஎன்ன நீர்கண்டீர்? கூறும்– என்று,
தங்கமுடித் தமிழரசன் கேட்க,"இந்தத்
தமிழ்ப்பாடல் பொருட்குற்றம் உடைய" தென்று,
அங்குள்ளோர் அனைவர்க்கும் விளக்கம் தந்து,
அரசாங்கப் பரிசுதனை; கப்ப லுக்கோர்
நங்கூரம் இட்டதுபோல் நிறுத்தி விட்டான்,
நல்லதமிழ்க் காவியங்கள் இயற்றும் கீரன்.

கிடைப்பதனைக் கெடுத்தன்றோ விட்டான், இந்தக்
கீரனெனும் படுபாவி! எனக்கு இங்கே,
தடைக்கல்லாய், பகைச்சொல்லாய், இருப்போன்; இந்தத்
தமிழ்க்குள்ளன்; இனிஇவனைப் பதுங்கி நின்று,
நடக்கையிலே சுருக்கென்று முள்போல் குத்தி,
நரித்தனத்தால் பழிவாங்கவேண்டும்—என்று,
வடக்குநதி விட்டுவந்த பார்ப்பான் மைந்தன்
மனத்தினிலே திட்டமிட்டுத் திரும்பிச் சென்றான்.

பெண்ணொருத்தி அவன்சென்ற பின்னர், கல்விப்
பெருஞ்சபைக்கு வந்துஒரு ஓலை தந்தாள்.
எண்ணங்கள் வைத்தெழுதும் கீர னாரே,
இச்செய்யுள் சரிதானா? — என்றான் வேந்தன்.
பண்சிறப்பும்; பாட்டினது சிறப்பும் பார்த்தால்,
பரிசுதரல் இவளுக்கே பொருந்தும்— என்று,
மண்ணாளும் மன்னனிடம், கீரன் சொன்னான்.
மற்றவரும் அம்முடிவை ஒப்புக் கொண்டார்.

சமைக்கத்தான் பெண்டிர்க்குத் தெரியும், என்ற
தம்பட்டப் பேச்சுதனைப் பொய்க்க வைத்த,
அமுதுக்கு நிகரான அணங்கே! இந்தா
ஆணிப்பொன் பெற்றுக்கொள்; என்று ஈந்து,
சமுத்திரத்தின் வெண்முத்தை மேலும் வாரித்
தந்திட்டான் மங்கையிடம், மதுரை மன்னன்.
தமிழ்க்கவிதை தனைநன்கு வளர்க்க, இன்றோர்
தமிழச்சி கிடைத்திட்டாள்!— என்றான் கீரன்.

பரிசளிப்போ ஆயிரம்பொன்; அதுவோ செம்பொன்;
பாவையவள் நல்லுடலும், மின்னும் செம்பொன்;
வரிவிழியாள் வளைக்கரத்தில் முத்து; மங்கை
வாயிதழின் உட்புறத்தும் முத்து; கீரன்,
தெரிவித்த வாக்கியமோ, நல்ல தீர்ப்பு;
தேன்மொழியாள் புதுப்பாட்டும், நல்ல தீர்ப்பு;
அரசனுக்கும் ஆனந்தம்; பரிசு பெற்ற
அணங்குக்கும் புகழாலே பேரா னந்தம்.

தென்கடலின் வெண்முத்து தன்னை—எட்டுத்
திசைபுகழும் பேரரசன் ஈந்த பொன்னை—
அன்னநடைப் பெண்ணரசி, பரிசு பெற்று,
அகங்குளிர, முகம்மலர, அங்கே, நின்றாள்.
மன்னவனே ஓர்வார்த்தை தமிழ்ச்சங்கத்தில்
மங்கைக்கும் இடமளிப்போம்— என்றான் கீரன்.
என்ன இது, சர்க்கரையின் அருகில், செந்தேன்
இருப்பதற்கா தடைசெய்வேன்— என்றான் வேந்தன்.

இன்றுமுதல் நமது தமிழ்ச் சங்கந் தன்னில்
இவளுக்கும் இடந்தந்தோம்— என்றான் வேந்தன்.
நன்று நன்று என்றிட்டார் சபையோர்; மன்னன்
நங்கைதனைப் புலவரிடை அமரச் செய்தான்
குன்றுகளின் இடையிலொரு மான்போல்; மேகக்
கூட்டத்தின் நடுவிலொரு வான் வில்போல்,
மின்னிடையாள் மன்றத்தில் காட்சி தந்தாள்,
வெண்ணிலவைத் தன்முகத்தால் அங்கு தந்தாள்.

❀

தேய்ந்த கனவு

இந்நேரம் சென்றிருப்பான் மைந்தன்; பாட்டு
ஏடுதனை தந்திருப்பான், சங்கந் தன்னில்;
இந்நேரம் கவிஞர்கள் கண்கள் பார்க்கும்;
இதயங்கள் வாசித்துக் கொண்டி ருக்கும்.
இந்நேரம் தீர்ப்பளித்துப் பரிசுப் பொன்னை
இந்தாநீ பெற்றுக்கொள் என்றி ருப்பர்.
இந்நேரம் பொன்பெற்று பூரிப் போடு,
எனதுமகன் திரும்பிக்கொண்டிருப்பான் வீடு!

என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டி ருந்தாள்.
எழிலரசி சிவன்மனைவி! சிவனோ; வீட்டுச்
சன்னல்தனை தேடிவரும் காற்று போலத்
தானாக வந்திடுவர் பொருளி ருந்தால்–
என்றதொரு எண்ணத்தில் ஆழ்ந்தி ருந்தான்.
இருவரும்இவ் வாரிருக்கும் போது, மன்னன்
மன்றத்தில் தான்பெற்ற தோல்வி யோடும்,
மனத்தினிலே சோர்வோடும் வந்தான் மைந்தன்!

பதைப்போடு எதிர்நின்ற மகனைப் பார்த்துப்
பார்வதியாள், "பாட்டென்ன ஆயிற்" றென்றாள்.
முதிராத ஓர்விதையை, நிலத்தில் நட்டால்,
முளைத்திடுமா எங்கேனும்? என்று, கூறிப்
புதிதாக நீர்எழுதித் தந்த பாடல்
பொருட்குற்றம் உடையதுவாம் அப்பா– என்றான்.
கொதித்திட்டான் பரமசிவன், 'கவிதை எங்கே
கொடுஅதனை' எனப்பெற்று விரைந் தெழுந்தான்!

கத்தாடி மீசை

காற்றுதனில் தென்றல்போல்; வீரர் ஏந்தும்
கருவிதனில் கூர்வாள்போல்; உறுப்பில் கண்போல்;
ஆற்றலிலும் அறிவினிலும் சிறப்பு வாய்ந்த
அதிமூதன் நமைவிட்டுப் பிரிந்து விட்டார்.
நேற்றிருந்தார் நம்மோடு, இன்று வெந்து
நீரானார் இடுகாட்டில்; அவருக் காகப்
பாற்றெளித்துப் பயனிலில்லை; அவரைப் போலப்
பைந்தமிழ்க்குப் பெருந்தொண்டு புரிதல் வேண்டும்.

வீட்டுக்கு நிதிசேர்த்துக் கொடுப்பர், வைர
விழாநடக்கும்; பொன்னாடை பெறலாம்; என்று
நாட்டுக்கு அவர்தொண்டு செய்ய வில்லை.
நற்றமிழ்க்கு வியாபாரி ஆக வில்லை;
ஆட்டுவித்தால் ஆடுகின்ற அடிமை; கோழை
அவர்போன்றோர் முதுகெலும்பு நிமிர்வ தற்குப்
பாட்டெழுதிக் காட்டியவர்; இலக்கி யத்தில்,
பகுத்தறிவைப் புகுத்தியவர்; கர்ம வீரர்.

தானியங்கள் முளைக்காமல் போவ தில்லை!
தனித்திறமைப் புதுமைகளும் சாவ தில்லை!
ஆனதினால், அவர்தந்த புதுமை நூற்கள்;
அத்தனையும் உயிர்வாழும்; அந்த நூற்கள்;
சீனத்திற் சென்றாலும், புவியின் மற்ற
தேசத்திற் சென்றாலும், அங்கு உள்ளோர்,
யானைதந்த தந்தமிது என்பர் அன்றி
யாருமதைப்— பன்றியின்பல்— என்று கூறார்.

காவியத்தால் நாட்டுக்கு நன்மை செய்யக்
கருதிடுவோர், ஈசலைப்போல், அற்ப நாளில்
ஆவியற்றுப் போகின்ற நூற்கள், நூறு
அளிப்பதனாற் பயனில்லை! பெருமை இல்லை.
பூவுலகோர் சிந்தித்து மதிக்கத் தக்கப்
புதுஎண்ணம்— வாடாத திறமை— சேர்த்துச்
சாவதற்குள் குறையில்லாப் பெருநூல் ஒன்று
தந்திட்டால், புகழ்நிலைக்க அதுவே போதும்.

இறந்துபட்டும் இறவாத மூதன், ஏட்டில்
எழுதிவைத்த கடைசிப்பாட்டிதுதான். இன்று;
துறவியையும் அழவைத்து விட்ட தன்றோ
தூயதமிழ்ப் பெரியாரின் மரணம்... என்று
மறுவில்லா நக்கீரன் ஓர்கூட்டத்தில்
மனங்கலங்கிப் பேசிக்கொண்டிருந்த போது
வறுமையுள்ள புலவனைப் போல் வேடமிட்டு
வந்திட்டான் பரமசிவன் விரைந்து ஆங்கே!

தெக்கணத்துப் பேரறிஞன் கீரன் தன்னைச்
சிவன்கோவில் சிலைகழுவும் பார்ப்பான் பார்த்து,
நக்கீரன் நீர்தானோ? – என்றான் அந்த
நற்புலவன், நான்தான் காண் கீரன்– என்றான்.
இக்கணமே; கூந்தலுக்கு இயற்கை வாசம்
இல்லைஎன்ற வாதத்தை தொடங்கும்– என்றான்.
மக்களங்கே, பேசாத பதுமை யானார்
வந்தவனோ மறுபடியும் தொடர்ந்தான் பேச்சை.

கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையா தென்று
கூறியதை மறுக்கின்றேன்; கரிய வண்டு,
மாந்தளிரை; ஓலைதனைத் தொடுவ தில்லை,
மணம்வீசும் பொருள்மீதே வண்டு மொய்க்கும்.
ஈந்துவரும் இலைபோல, மணமில் லாது
எழில்மாதர் கருங்கூந்தல் இருக்கு மானால்,
பூந்தாது உண்டுஉயிர் வாழும் வண்டு,
பூங்குழலில் மொய்ப்பானேன்?– என்று கேட்டான்.

எழில்மலரால், இளந்தென்றல் மணக்கும் அன்றி,
இயற்கையிலே காற்றுக்கு வாசம் இல்லை.
மழைப்பருவ மேகத்தைப் போலி ருக்கும்
மங்கையவரின் இளங்கூந்தல்; மலரின் கூட்டம்
வழங்குங்கின்ற வாசனையைப் பெறுவ தின்றி,
மற்றதற்குச் சுயமாக வாசம் இல்லை.
சழக்குடையோய்! சர்க்கரையின் சேர்க்கை யின்றித்
தானாகக் குடிதண்ணீர் இனிப்ப துண்டோ?"

என்றந்த நக்கீரன் திருப்பிக் கேட்டான்.
எதிர்நின்ற பூணூலான் ஊமை யானான்
மன்றத்தில்; பேசாமல் தருமி தோற்றான்.
வாதிட்டுப் பரமசிவன் தெருவில் தோற்றான்.
வென்றதங்கே நக்கீரன் நாக்கு; தோற்ற
வேதியனின் கால்அங்கே எடுத்த தோட்டம்,
ஒன்றுபட்டுக் கைகொட்டிச் சிரித்தார்! பார்ப்பான்
ஒட்டிவந்த பொய்மீசை வீழ்ந்த தாங்கே!

தமிழ்ரெலாம் வீரத்தை விளக்கிக் காட்டத்
தன்முகத்தில் சுயமீசை வைத்துக் கொள்வர்.
இமயமலை அடிவாரம் விட்டு வந்தோர்
ஏய்ப்பதற்கு, வேரில்லா மீசை வைப்பர்.
அமுதாங்கப் பாண்டியர்க்கு மீசை உண்டே,
அதுபோல, ராமனுக்கு உண்டா மீசை?
சமுதாயந் தனைக்கெடுக்கும் பார்ப்பான், மீசைத்
தந்திரத்தைப் பார்த்தீரா?– என்றான் கீரன்.

வெற்றிதனை மட்டுந்தான் இவ்வி டத்தில்
விட்டுவிட்டுச் சென்றுள்ளான் என்றிருந்தேன்;
மற்றிங்கே பார்த்தீரா? உம்மி டத்தில்,
வாதமிட்டு ஓடியவன் மீசை-- என்று
கற்றறிந்த கீரனிடம் ஒருவன் வந்து,
காட்டலுற்றான் அந்தப்பொய்மீசை தன்னை,
சுற்றிநின்றோர் அதைக்கண்டு சிரித்தார், அந்தத்
தூயதமிழ்ப் பெருங்கவியும் சிரித்துக் கொண்டான்!

❀

உதட்டில் உதடு

உள்ளே...

உதட்டில் உதடு
எச்சில் முத்தம்
நான்கு வேளை
இருட்டுக்குச் சேலை தந்தாள்
இனிக்கும் பதில்
சம்மதம்
படுக்கை சுகம்
காற்றுக்கு வர்ணம் பூசலாம்
யானை வால் கரும்பு
நாடோடியின் குரல்
வாலிபம் ஏற்பட்டது
அவன் கேட்டது
தித்திப்பு லோகம்
பருவம்

சுஜாதா அழைக்கிறார்

"என்னய்யா, இது! காவேரிபோல கொதித்தெழாமல், சும்மா தஞ்சாவூர் பொம்மையாய் இருக்கிறாயே" என்று தஞ்சாவூர் வாசியோ, அல்லது அதை அடுத்த தெற்குப்புற வாசியோ கூறுவான்.

"என்னையா, இது! ரேஸிலே கோட்டை விட்டாப்பலே குந்திக்கிட்டிருக்கியே!" என்பான் மதராஸ் மண்ணிலே பிறந்தவன்.

ஒருவனுடைய சலனமற்ற தன்மையை உரை வார்த்தையால் கூறுகிறபொழுது இப்படித்தான் சொல்ல முடியும். 'இழுத்தல்' என்ற வார்த்தை 'இசுத்தல்' என்று திரிந்து உலாவுவதைப் போலவே முன்னையவனும், இன்றைக்குப் பிந்தியவனும் சலனமற்ற தன்மையை எப்படிக் கூறியிருப்பானோ, கூறலாமோ-தெரியாது.

வார்த்தையிலே இழுத்துக் கட்டும் எண்ணங்கள் நேர்முகமாக எதிருக்கெதிராக ஏதாவதொரு எழுட்சியை உண்டுபண்ண முடியுமே தவிர, எதிர்கால நீண்ட இலக்கிய வெள்ளத்தில் நீந்தி, என்றைக்கும் எதிரொலிக்க முடியாது.

ஆனால்-

கவிதைச் சிமிழுக்குள் பூட்டி யனுப்புகிற வார்த்தைகள், ஒரு கட்டுக் கோப்புக்குள்ளே என்றைக்கும் நீந்திப் பறக்கிற 'இறவாத் தன்மை'யைப் பெற்று விடுகிறது.

அதனால் தான்-

"ஏயா இதுவென் கொல்! மூனந் துபொரா

தெழுதோ வியமா யினையே!"

எனப்பகர்ந்த வில்லிப்புத்தூரான் காலக் குறுக்குப் பாய்ச்சலுக்கெல்லாம் ஈடு கொடுத்துவிட்டு, இன்றும் புதுமையாக உலவுகிறான். மதராஸ்காரன் சொன்ன ரேஸ் ஆட்டமும், தஞ்சைக்காரன் மொழிந்த தஞ்சாவூர் பொம்மையும் இன்றைய மனிதனின் மனத்தைச் சொல்லலாம். ஆனால் என்றைய மனிதனின் மனத்தைச் சொல்வதற்கு அவை வலுப்பெறவில்லை.

வலிவோடு, அழியாத கட்டுக்கோப்போடு சொல்ல, கவிதை வேண்டும்; கவிஞன் வேண்டும். தமிழுக்கு வில்லனை - அப்படியொரு பாத்திரத்தை -தந்த ராமாயணத்தை உரை நடையிலே கம்பன் எழுதி யிருப்பானேயானால் 'ராவணன்' என்ற ஒரு செருக்கான பாத்திரம் முழு உருவத்துடன் நமக்குக் கிடைத்திருக்க முடியாது. அவனுக்கு அடுத்து வந்த புலவர்கள், உரைநடையிலே ராவணன் குந்தியிருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக அவனை அரித்துச் சாப்பிட்டு நமக்கு ஒரு மூளி ராவணனைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பார்கள்.

அது மட்டுமல்ல, பண்டைய நாகரிகங்களின் பட்டயக்கல்லாக, மனித சமுதாய நிழலில் விழுந்த பண்புகளின் பாசறையாகக் கவிதை, சங்கம் முழங்கி வருகிறது.

அழகை உடம்பிலும், அன்பை நெஞ்சிலும் சேர்த்து, கன்னியா குமரியிலே மாம்பழச் சாற்றை எடுத்து, இருக்கும் வெளிச்சத்தை 'இச்'சென்ற சத்தத்தால் அணைத்து 'உதட்டில் உதடு' என்று இளமைக்கு 'ஆளுகை' தந்து ஆர்ப்பரிக்கிறார் கவிஞர் சுரதா.

வில்லிப்புத்தூராரனின் நிழல் கீற்றாக இருந்து கவிஞர் சுரதா, உதட்டிலே உதடு சேர்ப்பதால், எச்சில் முத்தம் கொடுப்பதாலேயே இருட்டுக்குச் சேலை தருவது இனிப்பாய் இனிக்கிறது. அவர் உரை நடையிலே இருட்டுக்குச் சேலை தந்திருந்தால், அது தரும் சத்தம் சுவைச் சத்தாக இருக்காது. காமக் களிநடனம் புரியும் பிரகிருதி வாதமாகத்தான் இருந்திருக்க முடியும்.

காலக் காவேரியின் சுழிப்பு எல்லைகளைப் பந்தமாக வைத்துச் சுழற்றி, நீரும் நெருப்பும் கொள்ளாத கவிதை ஏட்டிலே பூட்டியிருக்கும் சுரதா, எழுத்தாளனைப் போல 'வாழுங் காலத்து'ப் புழுவல்ல. எதிரிக்குச் சதிராடி ஏற்றம் புரியும் அவர் 'எக்காலத்தும்' வாழும் உரிமை பெற்றவராகி விடுகிறார் இக்கவிதை தொகுப்பின் மூலம்.

கவிஞர் சுரதாவால், கலாவாணி
புலமைக்கு அழைப்புத் தந்தாள்- புரட்சி
புதுமைக்குப் பட்டம் தந்தாள்.

வாசவன்

சென்னை
2.1.1953 (முதற்பதிப்பின் முகவுரை)

உதட்டில் உதடு

தொங்கும் சூரியன் தொலைந்து, வீடு
எங்கும் விளக்கு எரியும் நேரம்,

கூவும் கோழியின் கழுத்து போன்ற
அரிவாள் மணையில் கறிகாய் தன்னை
அரிந்து கொண்டு இருந்தாள் அஞ்சலை.

அஞ்சலை, நிலக்கரி நிறந்தான்; ஆயினும்
உடலின் அமைப்பு; உளியின் உதவியால்
கட்டிப் பாறையில் வெட்டிய சிலைதான்!

அவளது புருஷன் அஞ்சான் என்பவன்,
புளியங் கொட்டை போன்ற கண்கள்
உள்ள ஆட்டை ஒட்டிக் கொண்டு
வந்தான் வீடு வந்தான் அவளிடம்.

நின்ற வினாக்குறி படுத்தது போல
இருக்கும் மீசையை இடது கையால்
முறுக்கிக் கொண்டே மனைவியைப் பார்த்து,
"நறுக்கிய மாம்பழச் சாறே! கேட்பாய்,
கன்னியா குமரி சென்று; அங்கே,

பள்ளக் கடலில் பதுங்கி இருக்கும்
முத்துக் குளிக்கச் சித்தங் கொண்டேன்.
சித்திர மயிலே! சென்று வரட்டுமா?"
என்றான். "நல்லது" என்றாள். சென்றான்.
அஞ்சான் சென்று ஐந்துநாள் ஆனது
அஞ்சலை தூங்கியும் ஐந்துஇர வானது.
ஒருதினம் காலை ஒன்பதே கால்மணி.
பள்ளிக்குச் செல்லும் பையன்கள் இருவர்
கன்னியா குமரிக் கடலில் பெரும்புயல்
வீசும் சேதியைப் பேசிக் கொண்டு
போவதை, அந்தப் பேதை கேட்டு,
'அவருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்ததோ'
என்று நினைத்தாள். நினைத்த உடனே,
அடிக்கடி அசையும் இமையில் வந்து
தொத்தி, கண்ணீர், முத்தாய் உதிர்ந்தது.

அழுத துளியும் பொழுது மாக
இருக்கும் போது, இவளுக் காக
கணவன் எழுதின கடிதம் வந்தது.
ஆவ லாக அதனைப் பிரித்தாள்:
"அஞ்சலை! எனது ஆசையின் உதவியே!
உன்னைப் பிரிந்த ஒருமா சமாக,
இரவு உலகம் இனிக்க வில்லை.
மனசு எல்லாம் மந்தம் ஆவுது.
கொத்தும் கிளிநான் குமரிக் கரையிலும்,
கொய்யாப் பழம்நீ கூரை வீட்டிலும்,
இருப்பதால் அல்லவா இந்தத் தொல்லை!
ஆகையி னாலே தோகை மயிலே!
நாளை ராத்திரி நிச்சயம் வருகிறேன்"
என்று எழுதி இருப்பதை; வர்ணப்

பார்வை இரண்டு பார்க்க, மனதால்
வாசித்து முடித்தாள். முடிந்ததும் உதடுகள்
சந்தோ ஷத்தால் சிவந்து போயின!

அடுத்தநாள், உதயம், நடுப்பகல், முடிந்து
அந்தி நேரம் வந்து பிறந்தது,
அத்தான் ஞாபகம் அவளுக்குச் சுரந்தது.

உடனே அந்தக் குடும்பத் தலைவி
நாயின் நாக்கு போன்ற பாதம்
நாட்டியம் ஆட, தோட்டம் சென்று
பூவும் அரும்பும் பறித்துச் சூடி
வெள்ளைச் சிரிப்புடன் உள்ளே வந்து
புடவை மாற்றி பொட்டு திருத்தி
அழகை உடம்பிலும் அன்பை நெஞ்சிலும்
தேக்கிக் கொண்டே, திறந்த விழியும்
துடித்த நினைப்புமாய், படுத்துக் கிடந்தாள்.

"அன்னமே!" என்று அழைத்த படியே
ஆளன் வந்தான். அழகி பறந்து
"மச்சான்!" என்று மார்பில் படிந்தாள்.
வெடுக்கென் றணைத்தான், "விடாதீர்" என்றாள்.
உடனே,

உதட்டில் உதடு புதைத்து எடுக்கும்
முத்தம், அதுதரும் சத்தம்—வளர்ந்தது.
இருந்த வெளிச்சம் இவர்களால் அணைந்தது!

❀

எச்சில் முத்தம்

சந்திரனைப் போல்தோசை!
சுவையுள்ள அதிரசங்கள்,
வெந்துபல மடைந்த
கொழுக்கட்டை, கிழங்குவகை,

வளைந்த நிலாப்பிறையின்
வடிவத்தைக் காட்டுகின்ற
சுளையுள்ள நாரத்தை,
சத்துள்ள வேர்க்கடலை,

சுற்றிவைத்த கம்பிச்
சுருள்முறுக்கு, நாவல்மரம்
பெற்றெடுத்துக் கொடுத்த
பழங்கள் – இவற்றை எல்லாம்

அங்காடிக் கூடையிலே
எடுத்துவைக்கும் தன்மகளை
மங்கம்மா பார்த்து,
"மாங்குயிலே! மனைவிளக்கே!

இடித்துவைத்த மாவை,
எடுத்துஒரு பானையில்வை.
கடிக்கின்ற குரங்கின்
கைவிரலைப் போலிருக்கும்

பயிற்றங்காய் தன்னைப்
பறிக்காதே, பெருக்கட்டும்,
வயலூரு சந்தையிலே
வாங்கிவந்த வெற்றிலையை,

ஈரத்துணி சுற்றி எடுத்துவை"
என்று சொன்னாள்.
ஊருக்கே பேரழகி
உடனே அதைச்செய்தாள்.

அங்காடி விற்றுவரும்
மங்கம்மா மறுபடியும்
சங்கீதம் பாடுகின்ற
பெண்வண்டு முகம்நோக்கி,

"ஏடுவிட்டுக் கொண்டிருக்கும்
இளவாழைக் கன்றுக்குப்
பாடுபட்டுத் தண்ணீர்
பாய்ச்சி வளர்த்துள்ளோம்.

வேலி, வெகு மோசம்.
ஆடெல்லாம் ஊசிக்குள்
நூலுபோலே புகுந்து
தின்றுவிடும், பார்த்துக்கொள்.

வயல்நுழையும் காவிரியே,
வளர்ந்துவரும் நெல்குருத்தே!
தயிர்க்காரி இங்குவந்தால்
சில்லரையைக் கொடு" — என்று

நொய்புடைத்துக் கொண்டிருக்கும்
வேலையை நிறுத்தித்தன்
கையெடுத்தாள், தன்சுருக்குப்
பையெடுத்தாள்; அதைஎடுத்துக்

காசையெடுத்தாள், கொடுத்தாள்
வாரிக்கொண் டையைமுடித்தாள்,
வாசமலர் அணிந்த
மங்கைதன் தாயிடத்தில்;

"அடுப்பிலே வைப்பதற்கு
ஒன்றுமே இல்லையம்மா!"
"ஒடித்துவைத்த மிலாறு
ஒருகட்டு இருந்ததெங்கே?"

"மான்கொம்பு போலிருந்த
அந்தமிலா றெல்லாம்
மீன்குழம்பு வைத்து
முடிப்பதற்கே போதவில்லை!"

"அப்படியா! ஆகட்டும்
குப்பனிடம் நான்சென்று
இப்போதே விறகுக்கு
ஏற்பாடு செய்கின்றேன்"

என்றுசொல்லி, 'வெய்யில்
அதிகரித்த' தென்றுசொல்லி
தன்கூடையைத் தூக்கித்
தலைமேலே வைத்திட்டாள்.

"'வரும்போது பனங்கிழங்கு
வாங்கிவா'ம்மா என்றாள்.
"சரி" என்றாள். "வீட்டில்
பத்திரம்" என்றாள். சென்றாள்.

பெற்றதாய் போனஉடன்,
பூத்தமலர்க் கொடியாள்
முற்றாத மாம்பிஞ்சை
வெட்டிவைத்துக் கொண்டிருந்தாள்.

கதிரடித்து நெல்குவிக்கும்
களத்தில், ஒருபுறத்தில்
முதிர்ந்த வயதுடையாள்
வியாபாரத்தைத் தொடர்ந்தாள்.

செந்தூரப் பொடிபோலே
செக்கச் சிவந்திருக்கும்
அந்திப் பொழுதினிலே
ஆகாயத் தின்மேலே

சாய்ந்திருக்கும் சூரியனை
சஞ்சரிக்கும் மேகத்தை
வாய்திறந்து கூவுகின்ற
வர்ணப் பறவைகளை,

பட்டங்கள் வால்அவிழ்ந்து
பறக்கின்ற காட்சிதனை
சுட்டும் விழியாலே
சுவைபார்த்துக் கொண்டிருந்தாள்,

அங்காடிக் காரிபெற்ற
அருமைமகள் கண்ணம்மா.
மங்கைஅவள் இவ்வாறு
இருக்கும் தருணத்தில்,

செல்லம் குடியிருக்கும்
தெருவில் முழங்குகின்ற
கல்யாண வாத்தியத்தின்
ஓசைவர, அதைக்கேட்டு

"பெரியநிலா முளைக்கும்
பன்னீர் இரவுகளில்
பருவமலர் தெளித்த
பஞ்சணையிலே படுத்து

அன்புக்கு அன்புதந்து
ஆனந்தக் காதல்செய்து
பொன்அழகன் தேகத்தைப்
போர்த்தபடி தூங்க, அந்த

அன்னத்தால் இனிமேலே
ஆகும். அதுபோலே
என்றைக்கு அந்த
இன்பம் எனக்குவரும்?

'பொதிகைமலைச் சந்தனமே!
பூவுலகில் எல்லோரும்
மதிக்கும் தமிழே! என்னை
மயக்குகின்ற போதையே!

ஓடிநிலம் கழுவும்
ஓடையிலே பூத்திருக்கும்
வாடாமலரே, அதன்
வாசனையே, எச்சில்முத்தம்

ஓசையுடன் கொடுத்து
உதவுவாய்' என்றுஎன்னை
ஆசையுடன் கேட்கஒரு
அத்தான் கிடைப்பதெந்நாள்?

'முத்துச் சிரிப்புதனை,
மூடிவைக்கும் என்உதட்டைக்
கொத்துங்கள் அத்தான், வாய்க்
கோவைப் பழத்தாலே'

என்றுநான் சொல்லி,
இதழ்கள், புதுத்தோள்கள்
கன்னங்கள் கற்கண்டு
முத்தம் கொடுப்பதெந்நாள்?"

என்றுஅடுக் கடுக்காய்
எண்ணமிட்டு கண்ணம்மா
நின்றுகொண் டேயிருந்தாள்,
நிற்கும் மரத்தருகில்,

அந்தச் சமயத்தில்
ஆருடம் சொல்லுபவன்
அந்த வழியாக
வருதைத் தான்பார்த்து

செங்கரும்பு போல்இனிக்கும்
சொல்லாலும், கையாலும்
'இங்கேவா' என்றழைத்தாள்
எட்டிப்பழ நிறத்தாள்.

கொட்டுகின்ற தேளின்
கொடுக்குமீசையை முறுக்கி
விட்டுக்கொண்டே வந்தான்,
வேல்விழியாள் வீட்டுக்கு.

வண்ண மலரழகி
வந்தவனிடம் வந்து,
"என்கையைப் பார்த்துச்சொல்"
என்று!சொல்லி உட்கார்ந்தாள்.

காவடிப் புருவம் பார்த்தான்
கன்னத்தில் மின்னல் பார்த்தான்
சேவலின் தாடி வர்ணம்
சிவப்பாகும் உதட்டில் பார்த்தான்

பூவுக்குப் புருஷ னாகும்
வண்டோடு கூந்தல் பார்த்தான்
தாவிடும் ஆசை யாலே
தனித்தனி அங்கம் பார்த்தான்.

'வான்வந்து கண்ணுக் குள்ளே
வளருதே! துள்ளும் கெண்டை
மீனுக்கு இந்தப் பெண்ணின்
முகத்திடம் வேலை என்ன?

மான்விழி இவள் விழிக்குள்
இருப்பதேன்?' என்று எண்ணி
தேன்பார்த்தான் பேச்சில், ரேகைத்
தொழில்பார்த்தான், பார்வையாலே.

மலர்க்கொடி போலே ஆடி
வளர்கின்ற இடையைப் பார்த்தான்.
'நிலத்திலே நிலா விழுந்து
விட்டதா? முகமா? இவ்வூர்க்

குளத்திலே பூத்திருக்கும்
தாமரை தானா?' என்று
தலைதூக்கிப் பார்த்தான், தையல்
தலையைத் தூக்காதபோது!

கண்ணாடி ஒடு போலே
கைநகம், விரல்கள், பொட்டு
உண்டாக்கும் அழகு, காதில்
ஒளிவீசும் வெள்ளைக் கம்மல்,

கண்ணம்மா காலில் ஒட்டிக்
கொண்டுள்ள சிலம்பு, அந்தக்
கன்னியின் கையில் சுற்றிக்
கொண்டுள்ள வளையல் பார்த்தான்.

இடதுகை தன்னில் ஓடும்
கைரேகை தன்னைப் பார்த்து
"வெடித்திட்ட அரும்பே! ஆறு
வாரத்தி லேகல்யாணம்

நடந்திடும்; உனக்குப் பிள்ளை
நானான்கு பதினா" றென்றான்.
உடைக்காத சிறு உளுந்தின்
உட்புறம் போல் சிரித்தாள்.

அரிசியைக் கேட்க வந்த
எதிர்வீட்டுக் கிழவி "ஐயா!
சுரைக்காயின் விதையைப் போலே
சிரிக்கின்ற மாதை, இன்னும்

பறிக்காத பூவை, கொய்யாப்
பழத்தினை, பறிக்கக் காத்து
இருப்பவன், இவளை மாலை
இடுபவன் அழகன் தானா?

படிப்போடு ஒழுக்கம் உள்ள
பையனா? இன்பம் காணத்
துடித்திடும் வயது வந்த
தோகைக்குப் பொருந்து வானா?

எடுத்துவர!" என்று கேட்டு
இடதுகை விரலை நெட்டி
ஒடித்துக்கொண்டிருந்தாள்; மூக்கை
உறிஞ்சி கொண்டிருந்தாள் மங்கை.

மேல்வேட்டி போட்டுக் கொண்டு
மீசையை, ஆட்டுக் குட்டி
வால்போல மேலே தூக்கி
வளர்த்துள்ள இளைஞன், பச்சை

நூல்சேலை உடுத்தி யுள்ள
நங்கையைப் பற்றிக் கேட்ட
கேள்விக்கு பதிலைச் சொல்லத்
தொண்டையை கனைத்துக் கொண்டான்.

"வெண்பஞ்சு போல் நரைத்து
இருக்கின்ற பாட்டி அம்மா!
நண்டுக்கண் போல் இருக்கும்
வேப்பம்பூ மாலை சூடி

மண்டலம் ஆண்ட பாண்டி
மன்னவன் போன்றோன்; கீர்த்தி
கண்டவன், கலைஞன்; இந்தக்
கோதையை மணப்பான்!" என்றான்.

கேட்டதும் மகிழ்ந்தே போனாள்
கிளிப்பேச்சுக் காரி. ஆனால்
பாட்டியோ அவனைப் பார்த்துப்
பரிகாசம் செய்தாள். காசை

நீட்டினாள். வாங்கிக் கொண்டான்.
அதிரசம் தந்தாள். பெற்றான்.
மூட்டையைக் கட்டிக் கொண்டான்,
விடைபெற்றான், எழுந்தான். போனான்.

போய்க்கொண் டேஇ ருந்தான்
புழுதிமண் வீதி மேலே!
நாய்ஒன்று அவனைப் பார்த்து
குரைத்தது; ஓடிக் கொண்டான்.

காய்க்காத மாம ரத்தின்
காலடி தன்னில் குந்தி
வாய்ப்பாட்டு பாடிக் கொண்டே
அதிரசம் தனை எடுத்தான்.

அதில்அவள், உருவம் தோன்ற,
'புதிதாகப் பார்க்கும் உந்தன்
பார்வைதான் இனிப்பா? இல்லை,
மெதுவான பேச்சா? முத்தம்
வளர்க்கின்ற உதடா?' என்று
மதி தடுமாற்றத் தோடு
மார்பிலே அணைத்துக் கொண்டான்.

※

நான்கு வேளை

காலை

அவன் : நீலக் கிழக்கு சுடர் ஆச்சு—வயலில்
நிற்கும் கதிர்கள் முற்றிப்போச்சு;

அவள் : ஆகையினால் நீங்க
அறுவடைக்குப் போங்க
அதற்கு அரிவாள் இந்தாங்க!

பகல்

அவன் : நெருப்பு வெய்யில் வந்தாச்சு— பனைமர
நிழலை நம்பி வீணாச்சு;

அவள் : அந்தத் துயர் நீங்க
வந்த வெய்யில் தாங்க
முந்தானைக் குடை இந்தாங்க!

அந்தி

அவன் : மேற்கு வானம் ரத்தம் ஆச்சு– உன்னால்
மலர்ந்தஉதடு வெள்ளை யாச்சு;

அவள் : வாசனையும் ஓங்க
சிவப்பு நிறம் தேங்க
வெற்றிலைப் பாக்கு இந்தாங்க!

இரவு

அவன் : நிலவு, பிரசவம் ஆச்சு– உன்னால்
நித்திரை சிதறிப் போச்சு!

அவள் : மன்னவரே நீங்க
மயக்கத்தோடு தூங்க
எச்சில் முத்தம் இந்தாங்க!

இருட்டுக்குச் சேலை தந்தாள்

உயர்வுக்கு திறமை தந்தாள் – பொது
உடமைக்கு அரசு தந்தாள்.

உணர்வுக்கு வீரம் தந்தாள் – மொழி
வளர்ச்சிக்கு எண்ணம் தந்தாள்.

புலமைக்கு அழைப்பு தந்தாள் – புரட்சி
புதுமைக்கு பட்டம் தந்தாள்.

பதுமைக்கு அழகு தந்தாள்– தென்னம்
பாளைக்கு சிரிப்பு தந்தாள்.

அல்லிக்கு உதடு தந்தாள் – அதை
அடிக்கடி எனக்குத் தந்தாள்.

இளமைக்கு வேலை தந்தாள் – தினம்
இருட்டுக்கு சேலை தந்தாள்!

இனிக்கும் பதில்

அவள் : முற்றிக் கனிந்திட்ட கோவைப் பழம்போல
முன்பே சிவந்த உதடுகளை,

வெற்றிலை போட்டின்னும் ரத்தப் படுத்துதல்
விவேக மாகுமோ காதலரே?

அவன் : வண்டு குலவிடும் தாமரைப் பூபோன்ற
வர்ண சிவப்பு முகத்தினிலே,

வண்ணக் கிளிப்பிள்ளை வாய்நிறப் பொட்டுநீ
வைப்பது மட்டும் சரிதானா?

அவள் : மிதக்கும் நிலாமுகப் பெண்ணின் உதடுகள்
மென்று தின்கின்ற கற்கண்டு என்றால்,

இதுவரை எத்தனை முத்தமிட்டும் அவை
இன்னும் கரையா திருப்பது ஏன்?

அவன் : வெட்டிய மாம்பிஞ்சு போன்ற விழியினால்
'வாருங்கள்' என்று அழைப்ப வளே,

சுட்ட கொழுக்கட்டை மேல்கலத் தண்ணீரைக்
கொட்டினும் மாவு கரைந் திடுமா?

பல்லிமுட்டை போன்ற முல்லை அரும்பினைப்
பின்னிய கூந்தலில் வைத்த வளே,

ஒல்லி இடைதன்னில் மின்னல் அடிக்குது
ஓசை மட்டும்அங்கு இல்லாத தேன்?

அவள் : சுற்றிப் படரும் கொடியின் உடம்பில்
ஜெனித்த மலர்போல் சிரிப்ப வரே,

சற்றுத் திரும்புங்கள்; கன்னத்திலே அந்த
சப்தத்தை உண்டாக்கிக் காட்டு கிறேன்!

※

சம்மதம்

ஆண் : நிமிர்ந்த பம்பரம் போல –யானை
நெற்றியின் மேடு போலே– மலை பாராய்!

பெண் : ஆகாயம் கட்டிய கொட்டகையோ மலை–
கண்ணா?

ஆண் : அசைகின்ற பூமியின் கொப்புளந்தான்மலை–
கண்ணே!

ஆண் : பாம்பின் சட்டையைப் போல – வெடித்த
பட்டையில் ஊற்றிய பால் போல–அருவி
பாராய்!

பெண் : பெண்கள்உடுத்தும் மேல் ஆடைதான் இப்படி
ஆச்சோ?

ஆண் : தண்ணீர்க்கும் வால் உண்டு என்பதற்(கு) இது
சாட்சி!

ஆண் : மரகதக் கம்பளம் மேலே – மயில்
இறகுகள் நிற்பது போலே–தோட்டம் பாராய்!

பெண் : காதலரால் இந்தத் தோட்டம் கசங்காதோ – கண்ணா?

ஆண் : குளிர்ந்த பனித்துளியாலே கல் உடையுமா – கண்ணே!

ஆண் : எறும்பு ஏந்திய பொரி போலே – சோழி
இரண்டு சேர்ந்தது போலே – அரும்பு பாராய்!

பெண் : இந்த அரும்புக்(கு) எப்போது கல்யாணம் ஆகும்?

ஆண் : இதழ்கள் மலர்ந்தபின் வண்டுக்(கு) இது தாரம் ஆகும்!

ஆண் : பகல் நிறக் கற்கண்டு போலே – பேசும்
நாக்கை வசமாக்கும் பழம் போலே – இனிப்பு
தாராய்!

பெண் : முத்தம் ஒட்டினால் உதடு களைப்பாகும்– கண்ணா!

ஆண் : நித்திரை செய்வதால் விழிகள் வீணாகுமா கண்ணே?

பருக்கை சுகம்

அவன் : பொட்டு சுமந்த வளே – காதல்
பேச்சில் சிறந்த வளே!
ஒட்டும் முத்தம் தருவாய்,

அவள் : களங்கம்
ஒழிந்த நிலா வரட்டும்!

அவன் : கட்டிக் கரும்பே உன்–உதடு
கற்கண்டுப் பால மடி
மொட்டு உன் பற்களடி,

அவள் : மொட்டிடம்
வண்டுக்கு வேலை இல்லை!

அவன் : நீல விழி மாதே– பிரிந்தால்
நிழலும் சுடுதே யடீ
பாலின் கிண்ணமே வா,

அவள் : அது, உப்பின்
பாத்திரம் சேர்ந் திடுமோ?

அவன் : ஆட்டுத் தலை போலே— கொண்டை
அழகாய்ப் போட்ட வளே
தோட்டத்துப் பச்சிலை நீ,

அவள் : அது, இலை
தைக்க உத வாதே!—
என்று உதட்டால் எதிர்த்தாள்; ஆயினும்
கொஞ்சும் ஆசை நெஞ்சில் இருந்தது.

ஊடுதல் பொறாத வேடுவர் தலைவன்
செடியை வளைத்து சிறுபழம் பறித்து,
அந்தப் பழத்தால் அவளை அடித்தான்.

கயல்விழிமாதும் கையால் அடித்தாள்
அடித்த கையைப் பிடித்துக் கொண்டு
வலிக்காத முத்தம் வைத்தான் உதட்டில்.

வெள்ளை நிலாவில் வாலிபக் காதலர்
உப்பு சமுத்திரம் ஒத்த விழியால்
ஓசை இல்லாத பாஷைகள் பேசி

ஆசை முடித்து எழுந்து போகையில்
ஓடும் காற்று உடையை இழுத்தது!

காற்றுக்கு வர்ணம் பூசலாம்

காற்றுக்கு வர்ணம் பூசலாம்– அது
காணும் பொருளாய் இருந்திடில்–மழைத்
தூற்றலை முத்தாய் மாற்றலாம்–கடல்
சிப்பி சிநேகம் கிடைத்திடில்–மேகம்
ஊற்றுகின்ற தண் ணீரினால்–மண்
வயிற்றில் கர்ப்பம் உண்டாக்கலாம்–ருசி
ஏற்றும் உதட்டிலேஇருக்கும் வெளிச்சத்–தால்
இருட்டைத் துரத்த முடியுமோ?

❦

யானைவால் கரும்பு

ஆரம் பத்தில் யானையின் வால்போல்
முளைத்த கரும்பை முதிர்ந்ததும் வெட்டி
வண்டியில் ஏற்றி விற்றுக் கொண்டே
போனான் கந்தன். போகையில் அந்திப்
பொழுது மாண்டு முழுநிலா வந்தது.

வந்த நிலவால் உலகம் குளிர்ந்தது
வெள்ளி விளக்கைப் பிள்ளைகள் அழைத்தனர்.
கணவனை மனைவி, கண்ணால் அழைத்தாள்.

நெஞ்சு இனிக்கும் நிலா நேரத்தில்
வீட்டுக் காரியின் உதட்டின் நினைவு
வண்டி ஓட்டிக்கும் வந்தது. வந்ததும்,

"வெடித்த வெள்ளரிப் பழம்போல் வெண்ணிலா—ஆடை
உடுத்தா மலே திரியும் வெண்ணிலா

கடலில் உடல் கழுவும் வெண்ணிலா —குளித்தும்
கறை படிந்தே விளங்கும் வெண்ணிலா.

நோய் வராமல் இளைக்கும் வெண்ணிலா – இரவு
நேரந் தனை வெளுக்கும் வெண்ணிலா

தாய்உள்ளம் போல் குளிர்ந்த வெண்ணிலா – வெள்ளித்
தட்டுபோலே அமைந்த வெண்ணிலா.

மங்கையின் முகம் போலே வெண்ணிலா – ஒரு
மாதம் உயிரோ டிருக்கும் வெண்ணிலா

தங்க நிறம் ஆகும் வெண்ணிலா – செந்
தாமரை யின் விரோதி வெண்ணிலா.

தண்ணீரில் முகம் பார்க்கும் வெண்ணிலா–வானைத்
தடவி சுகம் பார்க்கும் வெண்ணிலா

மின்னத் தெரியாத வெண்ணிலா – உச்சி
மலைக்கு முத்தம் கொடுக்கும் வெண்ணிலா"–

என்று பாடிக் கொண்டே போகையில்
மலையில் நிலவு மறைந்தது–அவனது
உதட்டுப் பாட்டும் உப்புபோல் கரைந்தது!

❀

நாடோடியின் குரல்

காக்காயின் மூக்கு போலே
கறுப்பான மேகம் எல்லாம்
கல்லுமலை மேல் படுத்து
மெல்ல நழுவுது பார்!

கோலப் புள்ளிபோல் இருக்கும்
கொடிமுல்லை அரும்பு மேலே
தேன்குடிக்க வந்த வண்டு
திரும்புது பார் ஏமாந்து!

அத்திப் பழம் சேப்பு—அவ
மேனி நிறமோ நெருப்பு
முத்தமிடும் கன்னம் ரெண்டும்
முள்ளில்லாத ரோஜாப் பூ!

மரத்தின் கிளையைப் போல
மான்கொம்பு இருந்திட் டாலும்
குருவிஅதில் கூடு கட்டி
குடும்பந்தான் செய்தி டுமோ?

வாலினால் நீர் குடித்து
வாயினால் பிள்ளை பெத்து
இருட்டை விரட்டு தடி
எங்க ஊட்டுத் திரிவிளக்கு

மண்ணு குடிச்ச மழை
மறுபடியும் கேணி ஆச்சு—அதிலே
தண்ணி எடுக்க வந்தா—அவ
தலையிலே பூ பறிச்சேன்!

❀

வாலிபம் ஏற்பட்டது

பட்டை உடுத்திய பச்சை மரத்தினிலே — கிளை
பக்கத்திலே, இலை கக்கத்திலே, உன்னைக்
கட்டிவைத்து சாறு கொட்டியது யாரு
உந்தன் உடம்பி னிலே — பழமே
உந்தன் உடம்பி னிலே?

பெண்களின் பாவாடை, வெண்பட்டு சேலையிலே — தேன்
பொங்கும் உதட்டிலே, தொங்கும் கரத்திலே
வந்து இழையாமல் வீண்காலம் போக்காதே
வாழைக் குருத் தினிலே — நத்தையே
வாழைக் குருத் தினிலே!

ஆக்கும் அரிசியைத் தூக்கிச் சுமக்காமல் — மலர்
ஆகும் அரும்புகள் நீஎடுத்து வந்தால்,
தூக்கி உன்னைப் பெண்கள் தாலாட்டுக் காட்டித் — தொ
டையில் வளர்ப் பார்களே — எறும்பே, தொ
டையில் வளர்ப் பார்களே!

கத்தத் தெரியாத பூவைக் கெடுத்திடவே – அதன்
கற்பைக் கலைத்துமே, அற்பத்தனம் செய்யும்
சித்தத்துடன் வந்தால், குத்து உதை விழும்
சங்கீதப் பூச்சி களே – வண்டுகளே
சங்கீதப் பூச்சி களே!

மாவிலைத் தோரணம் மாதிரி உட்கார்ந்து – மர
மட்டையிலே தொங்கும் கொட்டைப் பழங்களை,
காவிநிற மூக்கால் கொத்தையில், ஏற்படும்
காயத்தை ஆற்றுவ தார் – கிளியே
காயத்தை ஆற்றுவ தார்?

சாயக் கடலிலே, சந்திரன் தோணையிலே – நீ
சத்து நிரம்பிய முத்தம் கொடுத்ததால்
வாயிலே தாமரை வர்ணம் கலந்தது
வாலிபம் ஏற்பட் டது – பெண்ணே
வாலிபம் ஏற்பட் டது!

அவன் கேட்டது

பெண் : செந்தா மரை வேண்டுமா? – வளைந்து
வந்த நிலா வேண்டுமா?

ஆண் : முந்திரிப் பருப்பு போலே
முதுகு கவிழ்ந்த நிலா;
மீன் துப்பும் எச்சில் நீரில்
மலர்ந்த ரசத் தாமரை – வேண்டாம்
மானே உன்முகந் தான் – வேண்டும்.

பெண் : முல்லை அரும்பு வேண்டுமா? – கடலில்
உள்ள முத்து வேண்டுமா?

ஆண் : ஊதும் சங்குமுள் போலே
உருவம் அமைந்த முல்லை;
ஒட்ட கத்தின் பாதம்
ஒத்து இருக்கும் முத்து – வேண்டாம்
உன்வரிச் சிரிப்பு தான் – வேண்டும்!

பெண் : உண்ண உணவு வேண்டுமா – குடிக்க
குண்டு இளநீர் வேண்டுமா?

ஆண் : புலிநகம் போல் அரிசிப்
பொங்கல், பதார்த்த வகை;
பன்னீர்போல் தண்ணீர் உள்ள
பிஞ்சு வயது தேங்காய் – வேண்டாம்
பெண்ணே உன்உதடு தான் – வேண்டும்!

பெண் : சுடாத இரவு வேண்டுமா?– நெருப்புச்
சூரியப் பகல் வேண்டுமா?

ஆண் : வெள்ளி வெளிச்சத் தோடு
புள்ளி வெளிச்சம் சேர்ந்த
வர்ணக் கடல் இரவு;
வெய்யில் கொடுக்கும் பகல் – வேண்டாம்
உன்னைத் தழுவ இருள் – வேண்டும்!

❀

தித்திப்பு லோகம்

புருவத்தின் அடி யிலே
பிறந்த கண்ணை மயக்க
திருநாள் சிலையை போலே
அலங்காரம் செய்து கொண்டாள்.

அழுக்கு நிலா வெளிச்சம்
அடிக்கை யிலே, கோவைப்
பழத்தில் பழம் போலே
பதியவைத் தாள் உதடு,

கத்திரிப் பூ சேலை
கலைய, கூந்தல் கலைய,
தித்திப்பு லோகம் தன்னில்
தூங்கி விட்டாள் சோர்ந்து.

இருவிழி தவிர மற்
றெல்லாம் நனைந்த படி
கரையேறி னாள் குளித்து
காயாத சேலை யோடு.

❀

பருவம்

ஊரின் நடுவில் ஓர் குளம்; அதுவும்,
ஆமை ஓட்டின் அமைப்புபோல் இருந்தது.

கிண்ணங்கள் பரவலாய்க் கிடப்பது போல
தடாகம் முழுதிலும் தாமரைப் பூக்கள்
இருந்தன; அதோடு வண்டுகள் இருந்தன.

வாழைப்பூ போல வால்உள்ள வாத்துகள்
நீரின் அலைகளை நீந்திக் கலைத்தன.

எப்போதும் நீலமாய் இருக்கும் வானில்
சிவப்புச் சூரியன் எழுந்து, உலகை
வெள்ளை யாக்கும் விடியற் காலையில்,
வர்ணப் பறவைகள் விழித்துக் கொண்டன.

மிளகாய்க் காம்புபோல் மீசை வைத்த
வாலிபன் ஒருவன் வடக்கே இருந்து
தூண்டில் போடஅத் துறைக்கு வந்தான்.
பாத்திரம் கழுவப் பெண்களும் வந்தனர்.
பறவைகள் இறகு திறந்து பறந்தன.

வந்த வாலிபன் ஓரிடம் அமர்ந்து
தூண்டியில் வந்து தொத்தும் மீன்களை
கூண்டில் நிரப்பிக் கொண்டே இருந்தான்.

அரும்புபோல் ருது ஆகாத சிறுமியர்,
காதலால் உதட்டைக் காயப் படுத்திக்
கொண்டே இருக்கும் குடும்பப் பெண்கள்,

வயது பெருகிய மங்கையர்; அனைவரும்
மாட்டுச் சலங்கையை ஆட்டுதல் போல
பேசிக் கொண்டே பாத்திரம் துலக்கினர்.
சிலர்,
ஏசிக் கொண்டே பல்லைத் துலக்கினர்

இவனும் இவர்களும் இவையும் இப்படி
இருந்து கொண்டே இருக்கும் போது;

புதிய ரோஜாப் பூவைக் கூந்தலில்
பதிய வைத்து, பிறைநிலா நெற்றியில்
பொட்டின் வடிவை வட்டமாய்க் காட்டி,

இடுப்பில் குடத்தை எடுத்துச் சேர்த்து
அதற்கு இடதுகை ஆதரவு தந்து,
துதிக்கை போல வலதுகை வீசி

குளக்கரை நோக்கி கமலா என்பவள்
வந்தாள்; அன்னம் வருவது போல
வந்தாள், அப்படி வருகின்ற போதே
இடையும் வளைந்தது! குடமும் அசைந்தது!

தங்க நிறத்து அங்கப் பகுதிகள்
கிழக்கு வெய்யிலில் வழக்கம்போல் மின்னின!
பெண்ணின் உதடும், கண்ணும், முகமும்,
பழமும், கடலும், நிலவும் ஆயின!

பாத்திரம் துலக்கும் பெண்களில் ஒருத்தி,
கமலா வருவதைக் கண்டாள், சொன்னாள்
அவளைக் குறித்து சிவகாமி என்பவள்
தொடர்கதை சொல்லத் தொடங்கிவிட்டாள்.

சொல்லும் கதையை, எல்லோரும் கேட்கையில்
தங்கம் என்ற தையல் தும்மினாள்
மங்களம் என்பவள் மறுத்துப் பேசினாள்.

சத்தம் பலத்தது; சிரிப்பும் அப்படி!
மேயும் மீன்கள் எல்லாம் இதனால்
தூண்டிலில் விழாது தாண்டி ஓடின.

மீன்களை முதலிலும், பெண்களைப் பிறகும்
இளைஞன் பார்த்து, எரிச்ச லோடு,
"போதும், கொஞ்சம் பேசாமல் இருங்கள்,
உங்களால் மீன்கள் ஓடுகின்றன"
என்று சொன்னான். இதற்கு ஒருத்தி,

"தண்ணீர்த் துறைதான், பெண்களுக் கெல்லாம்
பேச்சு மேடை! புரிந்ததா?" என்றாள்
மாதுரி என்ற மற்றொரு மங்கை
"வேறு துறைக்கு போ" என்று சொன்னாள்.

"இந்தத் துறையில்தான் அதிகமாய் மீன்கள்
அகப்படும்" என்றான். அல்லி என்பவள்,
"இப்படிச் சொன்னால் ஒப்ப முடியுமா?
குத்து விளக்கில், எந்தப் பக்கத்துத்
திரியைக் கொளுத்தினும், எரியும்" என்றாள்.

அல்லிக்கு மறுமொழி சொல்ல முடியாமல்
தூண்டில் காரன் கண்ணை உருட்டினான்.
குடத்தைச் சுமந்த கோதை கமலா
அந்தச் சமயம் வந்து சேர்ந்தாள்.

அவளைப் பார்த்து அன்னம் என்பவள்
"இவ்வளவு நேரம் ஏன்?" என்று கேட்டாள்.

"வீட்டில் இன்று வேலை அதிகம்
அதனால் தாமதம் ஆனது" என்றாள்.

"ஏண்டி மறைக்கிறாய்! இப்போது தான், உன்
வீட்டுக் காரர் விழித்தார் என்று சொல்!"
என்றாள் மதுரம். இதனைக் கேட்டு
குலுக்கென்று சிரித்தது குளத்துக் கூட்டம்!
வெடுக்கென்று எழுந்து வாலிபன் போனான்!

❀

சாவின் முத்தம்

உள்ளே...

சாவின் முத்தம்
சிரிப்பின் நிழல்!
தேம்பிய குறை!
கரும்பில் கனல் எடு
தேன் கூரை
பிரேத ராஜ்யம்
தையலாருடன் தாயின் விளையாட்டு
பாய்க்காரனுடன் பாவையர் பேச்சு
அஞ்சுகத்திடம் அன்னையின் கொதிப்பு
சுடாத இரவு
கூதிரை யாமம்

அறிமுகம்

சிந்திக்காதவன்- குறிக்கோள் இல்லாதவன் கவிஞனாக இருக்க முடியாது. இது அசைக்க முடியாத கருத்தாகும்.

இன்றைய தமிழ்நாட்டிலே சிந்திக்காத - குறிக் கோளற்ற -சொல் வளமற்ற- தமிழ்மரபு, இலக்கணம், இலக்கியம் இவற்றைச் சரிவரத் தெரிந்து கொள்ளாத பெரியார்கள் 'கவிஞர்கள்' என்று உலாவுவதை நாம் கண்டுகொண்டு தானிருக்கிறோம். இந்தவித உளைச்சேற்றிலே தாமரை எனத் தகும் கவிஞர்களும் இருக்கிறார்கள்.

இந்தக் கவிதைகளை இயற்றிய இளைஞர் 'சுரதா' கவியரசர் பாரதிதாசன் அவர்களின் வழித்தோன்றல்: கவிதைப் போக்கில் மட்டுமல்ல; கருத்திலும் கூடத்தான். நண்பர் 'சுரதா' கவியரசர் அவர்களோடு நெருங்கிய தொடர்புள்ளவர். அந்தச் சாயலே இவர் தம் புலமைக்கு வேர் எனக் கருதுகிறேன்.

வளமாகூ சொற்சுவை -குன்றாத அழகு இயற்கைக்கு ஏற்ற ஆனால் புரட்சிகரமான கருத்துக்கள்- இன்பந்தரும் காதற் சித்திரங்கள்- புதிய புதிய உவமைகள்-இவை இந்தக் கவிதைத் தொகுதியில் நாம் காணுபவை.

10-3-1946
சென்னை

ப. முத்தையா
(முல்லை)
(முதற்பதிப்பின் முகவுரை)

சாவின் முத்தம்

இமை நெறித்து வானத்தில்
அடுக்கி, கொஞ்சம்
இருள் கிடக்கும் பார்வையிலே
கோணம் வாங்கி,

சுமைக் குடத் துடன்நடந்து
மாந்தோப் போரம்
சென்றிட்டாள் நீலவள்ளி!
வாய் இமைத்து,

"நமை விட்டுப் பிரியாத
அந்தி நேரம்;
நல்ல இசை; பனித்தென்றல்,
இருந்தும், காதல்

குமையாத நெஞ்சத் தான்,
"அத்தான்" இன்னும்
கொத்திட ஏன் வரவில்லை?"
எனத் துடித்து,

நடை யழுங்க நின்றிட்டாள்.
மீண்டும் யாழை
நடத்துகின்ற வாய்திருத்தி
'ஆமாம்' சேரர்

படைத்தலைவன் என் அத்தான்!
சிரிப்பின் ஆழம்
பார்ப்பதற்கு இது நேரம்
அல்ல! நேற்று

உடைபொருத்தி விட்டவளும்
நானே! இன்று
உள்ளத்தால் ஏன் சோகம்
தெளிக்க வேண்டும்?

விடை பெற்று வளர்கின்ற
கொடிகள், கொம்பின்
மேனிருசி பார்க்காமல்
போமோ!" என்று

பிசைந்திட்டாள் எண்ணத்தை
பின்னும் "துன்பம்"
பதம் பார்க்க ஓடிவரும்
அதிர்வாள்! பச்சை

அசைவினிலே கொடிமுல்லை
ஆகி, சற்று
ஆடுவாள். ஆனந்தம்
வைப்பாள்! மச்சான்

இசைஉலகம் வார்த்தெடுத்து
மணி நிலாவில்
"இந்தாடி தென்குயிலே!"
என உடம்பின்

திசைஎங்கும் பாய்ச்சிடுவான்.
அதற்குள் எந்தன்
சிறு நெஞ்சம் ஏன்
கூத்து ஆட வேண்டும்?

எனக் கேட்டாள் தன்மனத்தை
பறந்தாள் வீடு.
"ஏன் இவ்வளவு நேரம்
இழைத்தாய்?" என்று

வினவினான் அவள் தந்தை.
"அந்தி நேரம்
வெளிப் போக்கு வரத்துக்கு
ஏற்ற தல்ல

மனம் சுருட்ட வேண்டுமடி
அம்மா! இன்னும்
மணம் உனக்கு ஆகவில்லை
அதற்குள், என்ன?

இனம் தேடிச் சென்றாயோ!
போடி உள்ளே!
இன்றுமுதல் நடை துவக்கக்
கூடா" தென்று

தாய்எரிந்து மேல் விழுந்தாள்!
மலர்ப்பூங் கோதை
தரை ஊன்றும் விழியினிலே
பனி நிருத்தி

போய் அடைந்தாள் அறைவீடு.
அடுத்த வீட்டுப்
பெண் ஒன்று ஓடிவந்து
"வள்ளி அக்கா!

வேய் மூங்கில் தோள்
அணைந்து அமுதம் உண்ண
விடியலிலே வருவாராம்!
இதழில் முத்தம்

தோய்த்து வெகு ஆண்டாச்சாம்!
இதை உனக்குச்
சொல்லச் சொன்னார் அக்கா"
என்றாள்– துள்ளும்

ஆத்திரத்தில் வாய் உரித்தான்
தந்தை, "என்ன
இப்படியா நீ நடக்க
இசைந்தாய்?" என்று

கோத்தெடுத்தாள் சுடுசொற்கள்
அன்னை, அந்தக்
கொந்தளிப்பில் அவள் மிதக்க,
கொண்டைக் கம்பால்

சாத்துதற்கு விரைந்திட்டான்
அண்ணன். வீட்டில்
தங்குதடை இல்லாமல்
பேசலானார்.

ஊத்தை முடிக் கழிசடையுங்
கூட, பேச்சு
ஒன்றிருக்க அதை மாற்றிக்
குகைவாய் காட்டும்.

சாத்திய வாய் திறக்கவில்லை;
வள்ளி. துக்கம்
சாய்த்து நெஞ்சை நனைக்கின்ற
அவளைப் பார்த்து

"தூத்தூத்து!" ஏன் இந்த
விசனம்! குட்டைச்
சமூகத்தார் வாழட்டும்
உன்னைப் போன்ற

மாத்தமிழர் வாழுகின்றார்
இறப்பில், நீயும்
மடிவதுதான் உதயத்தின்
தீர்ப்பு, அங்கே

கோத்தாட நீ போவாய்
"அத்தான்—வீரன்"
குரவமலர்ச் சிரிப்பேந்தி
வருவான்" என்று

அந்தரங்கம் ஓசையிட
இந்த்ர நீலம்
அடர்ந்தது போல் விஷ
இருட்டுபூக்க, வெப்பம்

சிந்துகின்ற கண்கொழித்து
'ஆம், ஆம்' இந்தத்
தீர்ப்பேதான் சரிஎன்று!
முணுமு ணுத்து

வந்திட்டாள் மரணத்தின்
ஓட்டில்! நஞ்சை
மட்டித்து வாய் குளிர்ந்தாள்
"சாவின் உச்சி"

உந்திற்று விண்ணுக்கு
கிழிந்த கொள்கை
ஒருசொட்டுக் காட்டிற்றா?
என்ன கோரம்!

❀

சிரிப்பின் நிழல்

முல்லையிலே சிரிக்கின்றாள்! வான மென்னும்
முகப்பார்க்கும் கண்ணாடி மேனி எங்கும்
நெல்நிறத்துப் பட்டாடை போர்த்து கின்றாள்!
நீலமலர் இதழ்வடிவில் அசைந்து, பச்சைப்

புல் இனத்தில் ஒளிகின்றாள்! அருவி யாகிப்
புனல்வழித்துச் சிந்து கின்றாள்! அந்த ரத்து
வில்வளைவில் கூத்திட்டுக் கரும்புத் தோளின்
மணிவரியில் முத்துருவம் அடைகின்றாள்! செங்

கண்ணவிழ்த்து நெளிகின்றாள்! இதழ் வரம்பில்
கதிர்பரப்பி அந்தியினை படைத்து, காதல்
உண்ணுகின்றாள். படைக்கருவி முகத்தை ரத்த
ஊற்றாக்கிக் களிக்கின்றாள்! காந்தட் பூவின்

வண்ணத்து இளமைவிரற் கொத்தில், தங்க
மயில்நடனம் வைக்கின்றாள்! உத டிமைத்து,
எண்ணத்தை இசையாக்கி, வானம் பாடி
எடுத்துண்ணும் தூற்றலிலே மணியா கின்றாள்!

தன்நிறத்தை இவ்வுலகப் பொருளின் மேலே
தெளித்துவிடல் வேண்டுமெனும் பெருந் துடிப்பை
மின் உதயம் சரிக்கின்றாள்! குமரித் தென்றல்
விளைவுஅவள் இதயப்பூந் தோட்டம்! முத்தம்

தின்னுதற்குத் தளிர்க்கின்றாள்! கண்க லைத்துச்
சீர்திருத்தம் உதிர்க்கின்றாள். ஒளிமன் றத்தில்
இன்னஇடம் கலை! கவிதை இதுதான்! காதல்
என்பதுவும் இவ்விடந்தான் எனவி ளக்கிக்

காட்டுகிறாள் பாண்டிநாட் டரசி! ஆலங்
கனிநிறத்து இதழ்ஊன்ற வரும்என்மீது
வாட்டத்துப் பார்வையினை அனுப்புகின்றாள்!
வாரிஉண்ணப் போகையிலே 'தொடாதே' என்று

ஆட்டிவைத்து மறைகின்றாள் மீண்டும்மீண்டும்
அன்புவரும்! இருட்டும்!பின் அமுதம் தந்து
ஊட்டத்தைக் கொடுக்கின்றாள்! அழகு என்னும்
ஒளிமடந்தை! என்உலகம் அவள்தான் கண்டீர்!

❀

தேம்பிய தறை

தின்னும்இதழ் பூரிக்க, நிலாமுற் றத்தில்
சீக்கிரமாய்ப் போயமர்ந்தேன் 'குமுதம்' வந்து,
"என்னஅத்தான் ஊர்ச்சேதி? அம்மா, அப்பா,
எல்லோரும் சுகந்தானா? போன நாளாய்

சின்ன ஒரு தூக்கம் உண்டா! இருட்டோரத்தில்
தூக்கிஎறிந் தேவிட்டுப் போய்விட் டீர்கள்!
கன்னத்தில் விளக்கேது! சிரிப்ப ணைத்துக்
காவலுக்குத் தென்றல்வந்து வேலை செய்தாள்!

அரும்பெடுத்தேன் தொடுப்பதற்கு! அதற்குள் அத்தை
ஆருக்கு என்றதும்நான் கூம்பி விட்டேன்
பெரும்படையை முத்தமிடும் வாளை விட்டுப்
புருஷரெலாம் போயேந்தும் பெண்சி ரிப்பில்"

கரும்பைத்தான் சுவைக்கின்றார்! நான் உங்கட்குக்
கருவேலம் பழந்தானே! முந்தா நாளே
வருவதாய்ச் சொன்னீர்கள். அன்பி ருந்தால்
மனதுக்கு இறகு முளைக் காதா!" என்றாள்.

'குன்றுக்கும் சிரிப்புண்டு!' என்றேன். "அத்தை,
கண்மூடி விட்டார்கள் அத்தான்" என்று
புன்னகையில் சொல்லிழுத்து, உதடு ஏறிப்
புதுப்பாடம் வாங்குகின்றாள்! அமுத வட்டம்

ஒன்று எழும்! அதில் விழிக்கும்ஈர முத்தம்!
'உந்தும் மணி ஓடை, என்று இதழ்கள் சாய்க்கும்!
தின்றெடுத்தேன் வருவாயை அழகின் ஈடு
சீக்கிரத்தில் துள்ளிவந்து கணக்கில் சேரும்!

"வயிரத்தின் கிழிசலடி உதடு!" என்றேன்.
"வளர்கின்ற செந்தாமரை வாழ்த்த!" என்றாள்,
"பயிர்போன்ற நீள்விழியில் புறாக்கள்?" என்றேன்.
"உயிர்ச்சேதி எடுத்துவரும் பாங்கி!" என்றாள்.

துயரத்தால்; சீழ்பிடிக்கும் மதத்தால்? குட்டைச்
செய்கைகளால்— தேய்ந்துவரும் எளியோர் கூட்டம்
உயர்கின்றநாள் எந்நாள்? முத்துப் போலே
ஓர்சேதி காதலரே! என்றாள் கேட்டேன்!

"நடுஇரவுச் சிங்கத்தின் வலிமை, இந்த
நாட்டுக்கு மிகவுண்டு! நமது தோளின்
முடிவெல்லாம் கொக்கரிக்கும் வேகம்! வாளின்
முகமெங்கும் விஷக்கனலின் பாய்ச்சல் போரைக்

கொடுத்துவரும் அதிர்ச்சியிலே உலகே வந்து
குறுக்கிடினும் தூள்! தூள்!! தூள்!!! ரத்தத் தூள்தான்!
துடிக்கின்ற நம்இளமை— வேங்கைக் கும்பல்
சுடுகாட்டை அமைத்துவிடும் பகைக்கு, என்று

எழுந்திட்டான் ஓர்வீரன்! ஆவே சத்தில்
இறங்கிற்று பட்டாளம்! நெருப் பெடுத்துக்
கொழுந்துசெயும் விழிபறக்க, ரத்த வாட்கள்
கோடுவைத்துக் காட்டிற்றுப் பகையின் மேலே!

அழுந்திற்று ஆர்ப்பாட்டம்! மீட்சி ஏந்தி
ஆடிற்றுப் பேராண்மை!" என்றாள். நானும்
விழுந்தடித்து வருகின்ற கதை சுவைத்து
விடைகேட்டேன் முழுநிலவை! தந்தாள்! தின்றேன்!

❁

கரும்பில் கனல் ஏடு!

கங்கு கிழிந்த கதிர்விழிச் சிரிப்பை
வரிவா னத்தில் மாற்றி; நெஞ்சைப்
பனிப்ப டுத்தித்தன் பாதச் சிலம்பை
இசையில் இட்டு; ஏடு குளிர்ந்த
கன்னத் தரப்பில் சித்திரக் குழிகள்
கடைந்து; இளமை குழைத்து; மரகத
ஒய்யாரச் சப்பர மெய்த்தோள் விழுங்கப்
போதல் போல, பூங்கொடி அசைந்து

நடந்தாள், அழகு நடந்தது! செவ்வொளி
முன்னே நீந்த, முதிராச் சிரிப்பு
உலுக்கலில் நகர்ந்து ஒடிற்று! சேய்முகம்
உடுத்திய உதடு ஒளிர்கடல்!– வீணைக்கு

"வளரும் கருத்தை மடித்து மடித்து
கோணல் ஆகிக் குறுகா தே! கேள்:
இரத்தம் நடத்து! விரித்துவை! நெஞ்சை
அகல மாக்கு! நேரே நட்டுவை!

அதிர்ச்சி செய்யடா! ஆயிரங் கோடி
காலம் நீவாழ்! கருத்தில் சுணைபோடு!
ஆண்டை உலகைக் கிழியடா! கரும்பில்,
தேனில், கனல்–எடு! கூனல் வானம்,

ஓர்நாள் நிமிர்ந்தது உண்டா? ஓடு!
சாவின் ஓட்டில் தடுக்கி விழாமல்
ஓடடா விரைந்து! ஒடுங்காதே! வாள்
அடியில் வீழ்ந்து கிடக்கும் தோள்களை

அலையவிட் டுப்பார்! இமையின் ஆழம்
இருண்ட சமுத்ரம்! நேரில் கண்டதை
நெஞ்சில் கொடுத்து நோக்கடா! பழமையை
மாற்று! மாற்று!! மாற்றடா!!! இமைப்பில்

ஆற்றல் தொடங்கு! ஆணையிட் டேசொல்!
மதக்களி றேபோ! எதிரியா! கொலைசெய்!
வாளில் பிழிந்திடு! மருத்துவம் அதுதான்.
ஓட்டை உளத்தை ஒருசாண் இழுத்துவை!

மேலும் நீட்டி, வளர்ச்சியைக் கூப்பிடு!
எத்தனை விரிவுகள் ஆழ்ந்துபார்!" என்று
தங்கச் சுளையாய்ச் சலித்து; உலகின்
கவிதை பிரித்து, கலையின் உச்சியில்,
தேனார வார்த்துச் சில்லிட்டு ஓடும்

கானாறு போலக் களிப்பில் நழுவி,
அழகை அரித்து அள்ளும் கார்த்திகை
மாதத் தின்மேல் மணிவளைக் கரத்தைப்
புழுங்கினாள். விளக்குப் புதுநாள் தொட்டதே!

❀

தேன் கூரை

பயில்கின்ற தூக்கம் உன்னைப்
படைத்ததோ முகிலே? நீதான்
வெயிலற்ற சிரிப்போ? நோயோ
குள்ளத்தின் அடைப்போ? சாவோ?

துயரங்கள் அனுப்பி வைத்த
ஓலையோ? கும்பிக் காடோ?
உயர மல்லாத நெஞ்சின்
தாக்கலோ? மதத்தின் ஏடோ?

காக்கையின் கழுத்து வண்ணக்
கருக்கலின் புருவமே! செந்
தீக்குளிப் பாட்டு கின்ற
பரிதிக்கு, இதழ்கள் விற்று,

தேக்குகின் றாய்உ டம்பில்
செந்நிறப் புரட்சி! இன்று
ஆக்கிய சோறு போலே
அதற்குள்ளே வெளுக்கின் றாயே!

ஆருகம், சமணம், கண்ட
அதிர்ச்சியோ மின்னல்? "இந்து
ஓர்யுகம் முதிர்ந்தும் கொஞ்சம்
ஒடிந்ததா குறும்பு" என்று

நீர்வற்றி விட்டா யோநீ!
நிரீஸ்வர மதத்தைக் கண்ட
ஆர்வத்தில் பிறந்த தோஉன்
அழகிய பச்சை மேனி!

மாக்கோலக் கட்டி போன்ற
வானத்தில், குங்கு மம்போல்
பூக்கின்றாய்! முதல்சந் திப்பின்
பூரிப்பைத் தின்கின் றாய்!மின்

வாக்கிதோ! தந்தச் சிம் போ?
மகரமீன் துள்ளல் தானோ?
போக்கிடும் பார்வை, பிள்ளைத்
தொட்டிலோ? ரத்த ஊற்றோ?

நீர்வீழுங் கட்டெ றும்பின்
நிழல்போன்ற இலைக்கூட் டத்தை
வாருந்தா மரையைக் கண்டு
வானில்உன் வடிவங் கண்டேன்!

சீர்வைத்துச் சிரிக்கும் தங்கச்
சிரிப்புக்குக் கொழுந்து போலே
யார்வைத்தார் நாமம்? கண்ணே
அதைமட்டும் எனக்குச் சொல்லு

ஓரிழை யாகி விட்ட
பௌத்தம்போல் இளைத்து, பாவுத்
தார்போலே மேடு காட்டிச்
சரிகின்றாய்! ஒட்ட கத்தின்

பேர்போன கூன லோடு
பறக்கின்றாய்! பட்டா ளத்துக்
கூர்மைபோல் மின்னு கின்றாய்
சிரிக்கின்றாய்! கூவு கின்றாய்!

அலைகளை அடுக்கி வைத்து
அனுப்புதல் போல, வானில்
கலையாத நடைபி ரிக்கும்
ஈரத்தின் பரப்பே! "வாழ்வை

விலைபோட்டு நடத்து கின்றார்
மாந்தர்கள்!" வறுமை வெப்பம்
கொலைசெய்து விட்ட தென்னை!
மறைந்துகொள் கடலுக் குள்ளே!

இசையவிழ் மணிக் குவட்டின்
இமையேகேள்! இயற்கைக் கூத்தின்
அசைவெலாந் தமிழன்! உந்தன்
அறிவெலாம் கரும்புத் தூற்றல்!

புசிக்காத இளமை யேநீ
போ!போ!!போ!!! மேல்நாட் டாரின்
திசைபார்த்து நடைது வக்கி
தொழுநோய்போல் முகத்தை மாற்று!

ஏழ்மையின் குமுறலோ நீ
கொட்டிடும் சாரல்? "மக்கள்
வாழ்ந்திடத் தானே இந்த
வையமும்; உணர்வும்" குள்ளம்

'தாழ்ந்து போ' எனினும், வெற்பின்
தலைக்குமேல் நிமிர்ந்தாய்! ஆனால்
வீழ்ந்திட்டான் மனிதன்! குள்ளம்
வீழ்ந்தது! நீதான் வென்றாய்!

மேய்க்கின்ற ஆதிக் கத்தை
வீழ்த்திடப் 'புரட்சி' ஒன்றே
'தாய்க்குலச் சரக்கு' என்று
சொல்கிறாய் முகிலே! நானும்

ஆய்ந்துதான் பார்த்தேன். உந்தன்
அழகுவில் சண்டைக் கென்றால்
நீயென்னை உணர்ச்சி அம்பாய்ப்
பளிச்சென்று அணைத்துக் கொள்ளேன்!

நடக்கின்ற உதட்டில் ஊறும்
நல்லிசை கேட்க, முல்லை
அடுக்குள்ள கூந்தலில் வண்
டடைகிடந் தால்நீ ஓடி

வெடுக்கென்று நனைப்ப தாசொல்!
பிடிபடோம் என நினைப்பா?
அடிக்கடி உன்னைத் தானே
சந்திக்கும் கிழிந்த உள்ளம்!

தேர்வைக்கும் சிங்கா ரத்தைத்
தெருவெல்லாம் நிரப்பு தல்போல்;
ஊர்ஊராய் அழகு வார்த்து
உடையின்றித் திரிகின்றாயே

ஓர்அணுவுக் கேனும் வெட்கம்
எழவில்லை உடம்பில்? பெண்கள்
நீரிலும் தன் அங்கத்தின்
நிலைகாட்டக் கூசு வார்கள்!

நிழலிலே அழுத்தி வைக்கும்
இருட்டுபோல், நீல மொட்டில்
குழிபோடும் வண்டு, நேற்று
கற்றது தமிழை, இன்று

பழச்சுளை இறங்கும் பாடல்
பலப்பல அதற்குச் சொந்தம்!
பிழையிலாத் தமிழி னோடு
பிறந்தென்ன முகிலே நீதான்!

இலவசத் தில் சிரிப்பைத்
தள்ளுதல், அழகின் மேலே
உலவிட வேசி வைக்கும்
உபாயம் !நீ, உணர்வில் லாமல்

மலைமேலே மொய்த்து, நீரை
விதைக்கின்றாய் முத்து முத்தாய்
விலைமகள் அன்னாள்! நெட்டி
வெளுப்புடன் அங்கே போய்ப்பார்

ஒழுகாத நடத்தை இல்லை
உன்னிடம்! மணிபோல் ஏடு
கிழிக்கின்ற சிரிப்பு இன்னும்
குறையவே இல்லை. சந்தை

வழியிலே போட்டு கின்ற
வார்த்தைபோற் பேசு கின்றாய்!
சுழிபோட்ட மூளை. நச்சுத்
திரள்காட்டும் சட்டை மேனி!

அடுக்கடுக் காய்ச்சி ரித்து
அலைகின்றாய். கரிசல் நிற்கும்
நடுச்சாமக் குளிரில் மேற்கே
நடந்தாயாம்! மலையி டத்தில்

தொடுப்பாமே கள்ளி? எந்தன்
சுகந்தின் னக் கடிதம் போட்டாய்.
நெடுநெட்டிக் கோரையே! உன்
நெஞ்சுக்கு என்ன ஆழம்!

சிங்கத்தின் பிடரி போன்ற.
சோளத்தின் பட்டுக் குஞ்சு
அங்கத்தை, தடித்த காற்று
அதட்டினால் கலைகின் றாய்நீ!

தங்கத்தை ஊது கின்ற
நெருப்பே! நான் இன்பச் சேதி
திங்களன்றே கொடுத் தேன்.
செவ்வாய்தான் அனுப்பி வைத்தாய்!

நலமற்ற மரணச் சேதி
நறுக்கென்று கேட்ப தைப்போல்,
வெலவெலத் தேனே! சேதி
விரித்ததும் சரக்கே இல்லை!

'நிலவிலே விழுந்தி ருக்கும்
அழுக்'கென்று சொல்லிக் கொண்டாய்
உலவுங்காற் றாடியே கேள்:
'உலகமே இருட்டின் கூளம்'

அனலுக்கு நீலக் கும்பிப்
புகையுண்டே! படிகம் போன்ற
புனலுக்கு நுரையில் லாமற்
போனதா? புல்லி தழின்

தனதின்றி வாழ்ந்தி ருக்கும்
மலர்உண்டா? கபிலச் சாந்தில்
நனைகின்ற விழிக்கு, கோடி
நொடிப்புகள் பார்த்த தில்லை!

சன்னமாய் எனக்கு வந்த
தகவலால், வீணைக் காடே!
என்னென்ன விதமோ உன்னை
இகழ்ந்திட்டேன். இருட் டிருந்தால்

உன்னதம் வருமா நெஞ்சில்?
உன்கடி தாசி கண்டு,
தின்பண்டம் ஆனேன். என்னைத்
திருடிக்கொள்! நடத்து லோகம்!

'தேன்கூரை' என்று தானே
சொன்னேன்நான்; முகஞ் சுளித்து;
'ஏன்என்னை வைகின் றீர்கள்'
என்கின்றாய். வேண்டு மானால்

'கூன்வளர்க் குமநி லாவைக்
கேட்டுப்பார்! முகிலே! என்றும்,
நான்கசந் தாலும் எந்தன்
நறுந்தமிழ் அமுதந் தானே!'

தூள்அடிக் குங்காற் றுன்னைத்
துரத்திடப் பறக்கின் றாய்.உன்
தோள்சுவை பார்க்கத் தானே
துடிக்கின்றேன். குனிந்து நீவா!

ஆள்தானே நான். எனக்கு,
ஆகாயம் தொடுவ தற்கு
நாள்படாப் புதிய நெஞ்சம்
மிகவுண்டு. கைதான் குட்டை!

❀

பிரேத ராஜ்யம்

கொல்லைப்புறத்தில் கோதை:

வஞ்சிஎன்று வீட ழைக்கும்;
வையத்தின் இரத்தின வாய்,
'அஞ்சுகமே' என்றழைக்கும் போது – அவள்
அன்புரைகள் சந்திக்கத் தப்பாது!

தோகை மயில் சாயலிலே
சுந்தரம் எழுதி, விழி
போகும்வழியே நடைடைய இட்டு – கலையாப்
புதுமையை அழகினாலே தொட்டு

முல்லையிலே ஓர் அழைப்பு;
வண்டமுந்தும் தேன் உதட்டில்
நல்லஇசை; நூலிடையில் மின்னல் – திறந்து,
இமைக்கும் தேன் பாதிரிப்பூக் கன்னல்

கொல்லையிலே, தென்றல் விடும்
கூவலிலே, ஏடு விழும்
வெல்லஅந்தி நேரம்; நிழலின் ஈரம் – பார்த்து
வஞ்சி குளிர்ந்தாள் சிரிப்பின் ஓரம்.

❁

தையலாருடன் தாயின் விளையாட்டு

தேய்ந்திருக்கும் மெய்யு டம்பில்
தெம்புவந்து ஒட்டுதல் போல்
ஒய்ந்தசெயல் மீதுவிழும் ஊக்கம்; – தாயின்
உறைக்கின்ற நெஞ்சைப் புனலாக்கும்!

சுற்றி,யானைத் தோல்நி றத்துத்
திண்ணையிலே, பெண்க ளுடன்
வெற்றிலையை வாயில்ஏற்றிக் கொண்டு – உதட்டை
விடுகதை பிடிக்கவிடல் உண்டு.

தின்றுதின்று அச்ச லிப்பைத்
தந்ததால் கதை விழாவை
அன்றுமட்டும் தூங்கவைத்து விட்டு – சோழி
ஆட்டத்தில் விழுந்தார் புரிபட்டு.

சோழி விளையாட்டிலே
சுருட்டி வைத்த நெஞ்சுதனை
நாழிசென்றும் நேர்ப்படுத்தவில்லை – பேச்சு
நடுவிலே சிரித்துவைப்பார் முல்லை!

பாய்க்காரனுடன் பாவையர் பேச்சு!

பாய்கள் விற்றுக் கொண்டுஒரு
பையன்வந்தான் அந்தப் பக்கம்
தாய்செழித்த காதுஓசை மொள்ளும்! – வாய்
தம்பீவா இங்கே என்று அள்ளும்.

சேந்தும் விழி வீதியிலே
செல்ல, புதுச் சேதிதனை
ஏந்திவரும் ஆர்ப்பாட்டங் கண்டு – விளை
யாட்டில்விழுந் ததுபல துண்டு!

முறிந்திடாத் தனிப் பருவம்;
முகத்து எழில்; நல்வார்த்தை;
வரிவரியாய்ச் செப்பனிட்டு வந்தான் – தன்
வரவேற்பைத் திண்ணையிலே தந்தான்.

தாய் "படுக்கை வகை எங்கே?
சரச விலைக்கு வருமா?
நாய்கிடக்கு தம்பிஇங்கே பாரு – ஒரே
நறுக்கில் விலைபிடித்துக் கூறு"

என்றாள். அங்கே சிலபெண்கள்,
இலவம்பூ வாய் பிரித்து,
"பின்னியது யார்இதனை?" என்பார் – அவன்
புதுப்பார்வை வாரிவாரித் தின்பார்.

தாய்:

"பாய்விரித்துக் காட்டு தம்பி!
பஞ்சு மெத்தை கீழ்பரப்ப,
ஆய்ந்ததுவாய், மெல்லியதாய்த் தேடு – விலை
வார்த்து உருவாக்கலாம் பிற்பாடு"

பாய்க்காரன்:

"மின்னல் கிறுக்கும் சிரிப்பு
மங்கையின் கொழுந் துடலைத்
தென்றல்முட்டினும் வருத்தம் செய்யும்! – படுத்தோர்
சித்ர'உடற் சுகம்'அதனை வையும்!

ஒரு பெண்:

"பூவிலே புரளு கின்ற
பொன்னு டலின் ஆதிக்கம்,
மாவேரைப் போன்றஇந்தப் பாயில் வந்தால்
மீளாது சாக்காட்டின் வாயில்!"

தாய்:

"இதைச் சொல்லு? அதுஅங்கே
இருக்கட்டும் என்ம களின்
சதைகரைந்து போனாலும் போகும் – இது
திகைந்துவிட்டால் எல்லாமே ஆகும்!

விலையின் முனையை இழுத்து
விட்டுக் கொண்டிருக்க, வீட்டுத்
தலைமகளின் கொல்லை 'நடை தாண்டல்' – வந்து
சஞ்சரிக்கும் இருட்டுலகக் கூண்டில்!

அஞ்சுகத்திடம் அன்னையின் கொதிப்பு

"சதங்கை இடும் கொழுஞ்சியடி
தண்டாமலே நடந்து வர
பதம்எங்கே போயிற்றடி உனக்கு? – மயிர்
பிளப்புதீமை இழைத்தாலும் எனக்கு!

போடிஅங்கே? அடுக் களையில்
போட்டது போட்டே கிடக்க,
வேடிக்கைகுக் கண்அனுப்ப என்ன? – மண்
வீடுகட்டும் பேதையாநீ பெண்ணே!

மூட்டுவிடாப் பூக்கள், ரத
வீதியிலும் திரிந்தி டலாம்!
கூட்டுக்கிளி நீ! நகத்துக் கீறல், – இம்மி
கடந்தால்நம் தாழ்த்திக்கது ஊறல்!

"மூச்சு விதைக்காதே!" என்று
மூண்டதழல் ஊற்றி, வெளிப்
பேச்சுத்தொடுக்க விரைந்து வந்தாள் – திண்ணைப்
பெண்களுக்குச் சிலபேச்சுத் தந்தாள்!

ஒருத்தி:

"வண்ணம் இல்லையே ஐயா?
வஞ்சி நத்து வாளா? —"

பாய்க்காரன்:

"—உங்கள்
கன்னம், இதழ், இதில் அழுந்தும் போது — அந்தக்
கறையழகா காட்சிக்குப் போதாது!"

"இருள் விழுந்து விட்டதம்மா!
இளைப் பருந்த நேரமில்லை;
சுருள் படுத்தும் தாம்பூல ஈடு — போலே
தாங்கும் அடக்கம் லாபத்தோடு
பத்துப்பணம் வந்தால் இந்தப்
பாய் பிரியும்! 'தஞ்சையிலே'
முத்துமுத்தாய் எண்ணிவாங்கிக் கொண்டேன் — இந்த
வீட்டில் ஏதும் அதிகவிலை தண்டேன்."

மழைக்கூத்து:

வானதிர, தங்கத் திலே
வளரும்வரி மின் இறங்க,
தேன் கறக்கும் வாயிழையார் தங்கள் — வீடு
சென்றுவிட்டார்; எழுந்தது மங்கல்!

சிங்காரக் கடலின் தேமல்
இடுப்புபோல், முதிர் இருட்டுத்
தொங்குகின்ற மேகம்; குளிர்பிட்டு – மழை
சித்தரித்துக் காட்டிற்று வாய் தொட்டு!

தாயின் விருந்து:

"பப்பரிக்கும் இம்ம ழையில்
பயணம் வைத்தால் உன்உடம்பு
உப்புவிட்ட பாலைப்போலே ஆகும் – இங்கே
உறங்கிஎழுந் தால்மழையும் போகும்!"

வயதிலே இளமை! கனி
வாய்க்கு நல்ல துணைதம்பி!
ஆயிலில்தானே உந்தன்ஊரு என்ன? பெயர்
அளிப்பாயா எனக்குநீ முன்னே!"

பாய்க்காரன்:

"கீரையூரின் மூக்கில் ஏறி,
கொம்புபோல் கிடக்கும் ஆற்றின்
ஓரம்வந்தால் தோன்றும் நிலக்கூறு – அந்த
ஊருக்கு 'மருதூர்' எனப்பேரு!

'விடங்கன்' என்று கூப்பிடுவர்.
வெந்தய நிறத்துக் கப்பித்
தடம்அலைந்த பாதம்நோகு தம்மா – ஒன்றுந்
தின்னாமலே தூங்குகிறேன்சும்மா"

தாய்:

"கொஞ்சம்புசி அப்பா! மழை
கொக்கரித்துக் கொட்டு துபார்!
நெஞ்சுங்குளிரும்; அமைதி வேகும் – உண்டால்
நிற்கும் எல்லாம்! வெதவெதப்பு ஆகும்.

ஏழைநாங்கள் தம்பி! ஏதோ
இருப்பதுதான் அமுதம்! இந்த
வாழைஇளம் பிஞ்சிக்கூட்டு கைப்பா? – கிழங்கு
மசியலுக்கு என்ன?பாகம் தப்பா?

முற்றிய தயிர் இரவில்
வேண்டுதல் தகாது; கீரை
வற்றலுண்டு; வேண்டியதைக் கேட்டு – வயிற்றை
வஞ்சனை பண்ணாமலேநீ தீட்டு!"

காற்ற மைக்கக் கைவிசிறி;
கனிசெய்த தேன் அடிசில்,
சேற்றில்கிடக்கும் ஆரல்போலே – கிடாரந்
தொக்குஊறு காயை இலைமேலே

குனிந்தபடி பரி மாறிக்
கொண்டிருந்தாள் அன்னை, உள்ளே,
நனைந்தகொதிப் பாலேவஞ்சி காந்த, –"முல்லைப்
பூஉண்டோ" என்றான் சிரிப்பேந்த!

தாய்:

"பூஉண்டு! காலத் தால்
பூத்ததுதான். கண்ணில் அந்த
ஓவியம் விழுந்தால் பறிபோகும்! – இளமை
சந்தித்தால்புதுப் பாகுகள வாகும்!"

தையல் எழுப்பிய தங்க நிலவு:

உச்சி அனுப்பும் மலைமேல்
ஒட்டும் நிலாப்போல்; குதிர்மேல்
கச்சிதம் எழுதும்முகம் தந்தாள்! – 'அந்தக்
காமரூபன் அழகிலே விடிந்தாள்!

தடுக்கி விழுந்தான் அழகில்!
தாவி எடுத்தாள் விழியால்!
நொடிக்குநொடி நூறுவிதம் மாறும்! – பார்வைத்
தொடர்ச்சியிலே 'கேள்வி – பதில்' தூறும்!

தொட்டுக் கிடக்கும் விழிகள்
தாய்நிமிரக் கூடு சென்று
கட்டிவைக்கும் சிட்டிறகைப் போலே – விளிம்பு
வெட்டும்வாயைத் தூர்த்திடும் தன்னாலே

"தெங்கிருக்கும் பாளை!" என்பான்
"சுவைதம்பி!" என்பாள் அன்னை.
"அங்கிருக்கே தேமதுரம்!" என்பான் – "நாழி
ஆறிவிட்டால் தித்திக்காது!" என்பாள்.

விடங்கன்:

"தொத்தும் மணிக் கிளிக்குத்
தோள்எழுப்பித் தந்தி டாமல்
வைத்திருந்தால் மனம்வெந்து சாகும் – வீணாய்
மொட்டுப்பிரிந்த பசுமை வேகும்!"

பதிவுசெய்த அன்பு கண்டேன்.
பனிச் சிரிப்பிலே, வடியும்
நதிகண்டேன்! ஏன்கோடி வார்த்தை – அம்மா
நனைப்போம் நாம் தூக்கத்தில் நேரத்தை!

சுவைப்பின் ஆழத்தில் மணிக்குயில்கள்:

மசிகூட்டும் தூக்கம், தாயின்
மணிபூட்ட; சேல் விழியில்
பசிகாட்டிக் கொண்டிருந்தாள் வஞ்சி! – பறந்து
பாகுஊட்டினான் இதழைக் கொஞ்சி!

வைத்தி ருக்கும் வீணையிலே
வந்து படுகின்ற இசை
மெய்த்தமிழை நத்துவதைப் போலே – இதயம்
மெய்யறம் வளர்க்கும் விரிவாலே!

அமுதநிலை தொட்டு, மேனி
ஆண்டு வரும்போது, அவள்
குமுதம் பிடிக்கின்ற இதழ்ஏடு – காதல்
கண்டுமுதல் பார்க்கும் கிளிக்காடு!

பலன்விழுந்த காட்டெ ருமைப்
பத்தை வயிற்றைப் போல
நிலத்திலே கிடக்கும் பெரும்பாறை — அதில்
நீண்டவாய் கிழித்துக்கொள்ளும் தேரை!

எண்ணெ யிட்டுக் கொட்டைமுத்தை
எடுத்தழகு பார்ப்பது போல்
வண்ணநிறப் பாம்புஅதைத் தேடும் — பட
வாய்விரித்து ஊர்ந்துவந்து ஆடும்!

கங்கிலே கிடந்து 'பல
கறைநடைத்தி' ரத்த இதழ்ப்
பங்குபிரிக் கின்றசுவை வேளை! — நஞ்சு
பட்டுக்கரிந்தார் 'வஞ்சி — காளை!'

இருட்டுலகம் விடு தலையில்
ஏறுகின்ற வாள் உலகம்!
குருத்தில்உடல் இறக்கும் தேரை! பாம்பு! சாவின்
மொட்டுக்களித்தன பிரேதக் காம்பு!

❁

சுடாத இரவு

மணிவரிக் கடல் உயிரின் விரிப்பில்
தாயின் உவகை வடிந்தது!

நிலவு வடித்தது இன்பம்! தென்றல்
உலவிக் கொண்டே உலுக்கிற்று மணத்தை!

சிலதி; மீனா; சித்திர லேகா;
நீலம்; குமுதம்; நிலாப்பூ; வஞ்சி;
வலக்கரம் போன்ற வண்ணக் குறிஞ்சி;
ஆடி நெளிந்து, அமுதம் திறந்து,

கிண்ணத் தாமரைக் குளத்தில் படியப்
பாடிக் கொண்டே பறந்தனர்!
குளிரி மீனின் கூர்வாய் போன்ற
முள்ளிச் செடியில், விரிந்த பூக்கள்,

கண்ணாடி நீரில் தன்முகம் பார்த்தன!
அல்லிகள் ஆடின! அழகிய பெண்களின்
ஒல்லி இடையின் ஒடிசல்; கூத்து
வழங்கிற்று! குளத்தின் ஒப்பந்த இளமையில்

இழைந்தன கரங்கள்! இங்கும் அங்கும்
தவ்வினர்! முகத்தைச் சந்தனப் பூவின்
ஒவ்வொரு இதழால் ஒதுக்கிக் கொண்டனர்;
மலரினில் முகத்தைச் சாத்தி

மகிழுவர்! அலைகள் நெய்து,
புலர்ந்திடும் பார்வைக்கூட்டம்
போக்குவர்! சேந்திக் கொள்வர்!
அலர்ந்தவாய் அனுப்பிக் கேள்வி

ஆடுவர்! விடைத ராதாள்
உலருவாள்! "ஊமைப் பெண்ணே!"
ஓடடி என்பாள் மீனா!

கூம்பிய நளினப் பூவைக்
கிண்டுவர்! அன்னக் குஞ்சு
தாம்புக்கால் அரவிந் தத்தின்
சதிர்விளை யாட்டு என்று

சாம்பிட இமைகள் தைக்கும்!
சேற்றினில் தவளை கத்தும்!
பாம்புவாய்க் கருநீ லத்தின்
பரப்புதான் குளத்தின் போர்வை!

முகந்துநீர் கொப்ப ளிக்க
முந்துவாள் ஒருத்தி! "பூவே
சுகந்தானா?" என்று கன்னம்
தட்டுவாள் அடுத்தாள்; எந்தன்

அகத்தினைத் திருடும் கள்ளன்
யார்எனக் கேட்டல், "மொட்டே
எகத்தாளம் செய்கின்றாயா!
என்னடி அம்மா!" என்பாள்.

'வரிப்புறம் இரண்டு' என்று
வளர்த்துவாள் கதையை! வஞ்சி,
சிரித்துப் பின் சொல்வாள் "சீச்சி
சொல்லடி 'அணில்கள்' என்று!"

பெருத்ததோர் மலையை, மீனா
'பருப்பதம்' என்பாள்! 'நீல
அரி'என்பாள் சிலதி! 'சித்ரா'
'அலைகடல்' என அமைப்பாள்

தேர்வு நடத்தும் கண்களை அழைத்து
நீர்ப்பூ மேலே நிறுத்தினாள் குமுதம்
ஓடும் மீனை 'விடாதே' என்று
தேடுவாள் சிலதி! சிரிப்பாள் மீனா!

உடும்பின் நாக்கை ஒத்த கேசரம்
தொட்டுத் தேனைச் சுவைக்கும் வண்டை
அடிப்பாள் நீலம்! அலரிப் பூவில்
தடுக்கும் அலையைச் சீய்த்து, அழகை

அழுத்துவாள் தடத்தில்! எழுவாள்
தாமரைத் தேனின் பார்வை கழுவி!
நீரின் நிலையில் நின்று, தமது
ஊரின் சம்பவம் உருவி, பேச்சைப்

பலப்பல மாதிரி பறித்தனர்! நாவில்
கலைச்சொல் ஆக்கம் விழித்தது! கத்தி
விழிதயா ரித்த விளைச்சலில், விளக்குப்
புழுதி எழுந்து போனது எங்கும்!

சிரிப்பு நடந்தது! தீந்தமிழ் உதட்டின்
புரிகளைச் சிக்குப் படுத்தாத 'குறிஞ்சி'
பச்சையில் வைத்தாள் பார்வையை! 'வஞ்சியும்'
அச்சுப்போல் அங்கே அழுந்தினாள்!

வண்ணக் குறிஞ்சியின் வாடாக் குறிப்புகள்
அண்ணல் ஒருவன் அருகில் நீண்டது!
சாகசம் பிடிக்கும் இதழால், "சோலை
போகிறேன் பூக்கள் பறிக்க" என்றாள்!

அமைத்தனர் விடையை! எல்லாப் பெண்களும்
சுமைக்குளிர் தூக்கிச் சென்றனர் காடு!

பூக்கள் குவித்தனர் பெண்கள்! குறிஞ்சியும்
தேங்கிய மடை,நடை வாங்குதல் போல
விரைந்து, விரைந்து, எழுச்சியில் துள்ளி,
விசாலத் தாலே, விழுங்க – அமுதின்

ஊற்றுக் கண்ணில் மழைக்கடல் தோண்டி
சர்க்கரைத் தாக்கலில் தடுக்கி விழுந்து!
தக்க விதத்தில் – சுவைத்து – அவனுடன்
கழிக்காத கரும்பு அறுவடை குவித்தாள்!

'என்னடி சிலதி இன்னும் குறிஞ்சியைக்
காணோமே ஏனடி? காடுதான் தின்றதா?
முல்லைப் பூவில் மூழ்கிவிட் டாளா?'
என்ற மொழிகளை இருவரும் கேட்டனர்.

"வருகிறேன்" என்றாள்: வாடாத மலரில்
ஒருதரம் அழுந்தி, "ஓடிப்போ மயிலே!"
என்று தொடுக்கும், இவனிதழ்ச் சிரிப்பு,
அன்றுபூத்த அழகிய தாரகை!

குளத்துக் கரைக்குக் கூவிப் பறந்தனள்
கோதை வண்ணக் குறிஞ்சி!
ஒவ்வோர் பூவின் கதையைப் பேசி
செவ்வாய் வகுத்த சிரிப்புடன், பெண்கள்

அழகைபிடித்து எழுந்தனர்! குறிஞ்சியும்
பழகிய விருந்தை நினைவில் தொட்டு
"சுடாத இரவு" எனநடந் தாளே!

❀

குதிரை யாமம்

கருநீல வானத்து அரங்கில் கூத்திடும்
துளிதூங்கு முகில்கள், சித்திரக் குளிரை
மலையில் ஊற்றின! வாழைக் குருத்து
வடிவம் போல வளரும் அருவி;

விரைந்து தன்னிடம் வருகின்ற நீரை
மடியில் வாரிச் செழித்தது!
கோடை வளர்த்த, தடுப்பை எல்லாம்
மழையின் வளத்தால் கழித்து; பனியில்

எடுப்பாய்ச் சிரிக்கும் அரசிலை மேலே
அலையும் நரம்புகள் போலக் காட்டு
ஆறு நடந்தது! அருவியும் தன்கை
நீட்டி அழைத்தது! சிவந்த வெள்ளத்து

முகமெலாம் திருமணம்! அகத்தில் பளிச்சிடும்
தோட்டத்துச் சிரிப்பால் தொட்டு, மேனியைக்
கூட்டி முடிந்து குதித்து ஓடின.

சுழிந்தபச் சாப்பைத் திருகி, புழுதியை
மிச்சம் இடாமல் உரித்து; விரைவாய்த்
தக்க நேரத்தில் சகாயந் தேட
கொக்கிக் காற்று குனிந்தது! பழுப்புகள்
அக்கரையாக அதன்மேல் குதித் தன

அதிரும் உலகில் நெறிதேய்ந்த மக்களின்
ஆணைபோல் வைர மின்னல் ஆடிற்று!
வடுவை நிறுத்தும் மரகதக் கொப்பில்
குங்குமம் இழுக்கும் கொழுந்துகள்; இடியால்

கொதும்பின! ஊதலால், கூட்டுப் பறவைகள்
அதுங்கின! காதல் எச்சரிக் கும்இதழ்,
பதுங்கிற்று வஞ்சியின் பவளக் கரைகளில்

சிக்காறக் கிடந்த நீண்ட உலகம்
ஒடுங்கி ரணத்தில் உறங்கிற்று!
மணிக்கூரை வேய்ந்த வீடும், மாடமும்,
அணிலின் முதுகுபோல் ஆயின அன்று!

பொன்தாழ் அருவிப் புனல் அசை கின்ற
பாதையில் ஓர்குடில்! ஊதையால் நடுங்கும்
பிரேதச் சாவடி! பிள்ளை வண்டின்
சித்திரக் கூடு தேன்கலைந்த உடனே

பொத்தல் காட்டுதல் போல, அந்தக்
குடிசையின் அங்கம் காணப்பட்டது.
ஒழுக்கு அறிந்து பழுதுகள் துவட்டி,
குழந்தைக் குவியலைக் கோலி,சூடு

அமைத்துத் தானும், நொடிக்கும் இமைகளைக்
குவித்து முடிந்து தூக்கம் பெய்தாள்!

மூச்சு விடாமல் வழியுங் குளிரில்
சில்லரிச் சிலம்பு புலம்புதல் போல,
காசுகே ளாதே கத்தும் தவளையின்
ஆட்சி நீண்டது! அந்நேரத்தில்

கூரையின் மூக்கில் குளிர்ந்த முத்தை
வார்த்து நேரம் வளர்த்தது அந்தரம்!

ஊதை திரும்பும் வீட்டில்! மூச்சை
வேது பிடிக்க விரைவான் பையன்.
கூடல்வாய் வளர்க்கும் வாடாச் சொட்டுகள்
ஓலையில் தடுக்கி மேலே உதிர்ந்ததால்
தூக்கம் எழும்பித் துணைவிழி இரண்டையும்
தாக்கிற்று! இல்லமே சிலிர்த்தது!

தேம்பிற்று இளமை! சிறுமி தரைஉந்தி
வறுத்த மொச்சையின் வாயைப் போலக்
குளிரிதழ் நீவிக் கொட்டாவி அனுப்பினாள்.

மீண்டும் அமைத்த தூக்கம் பார்வைக்
கூண்டில் நுழைந்து குளித்தது!
நொச்சிப் பூஉதிர் கபில வண்ணத்துச்
சுருளும் இருட்டில், முடங்கிக் கிடந்தன

பச்சைக் குழந்தைகள்! தீய கனவின்
வரிகளை உதடு வரைந்திட அன்னை
பொருந்தாது கொஞ்சம் புரண்டாள், மூலையில்
கிடந்த விளக்குத் தண்டில் முகம்விழ,

உலராத காயம் நனைந்தது அழகில்!
இந்தத் தீங்கை இழைத்தது எதுவென
கைவிளக் கேற்றிக் காணுவ தற்குத்
தேடினாள் தீபம்! திரும்பினாள். வாயின்

நுனியில் முளைத்த அசதி, அவளைக்
கவிழ்த்தது கீழே! கூடல் முகட்டின்
மேலோர் சத்தம் விரிந்தது! மெதுவாய்க்
காதை அழைத்தாள். கண்கள் ஓடின!

"சரசர" என்னும் சத்தம், முடுக்கில்
புடைபுடைத்து — நகர்ந்தது! கோதையின்
உள்ளம் இறுகி, உதட்டின் உச்சி,
தள்ளாட்டத்தில் கட்டுத் தளர்ந்திட
விளக்கைத் தேடும் வஞ்சியின் கரங்கள்

துடைப்பக் கட்டையின் இடுப்பைக் கௌவின!
சிறுசிறு அசைவுகள் பெருக, நினைவுகள்
பலப்பல விதமாய்ப் படையெடுத் தாடின!
இழைவிளக் கின்றி இடிந்தாள்! குழந்தைகள்
மழையில் நனைந்ததை நெஞ்சில் முடிந்தாள்.

மின்னல் விரிந்தால் விளக்கே வேண்டாம்!
அப்போது வீட்டிற் கதுவும் இல்லை.

மெதுவாய்க் கதவின் வாய்நீக்கி, திண்ணை
விளக்கு மாடத்தில் விழுந்தது அவள்கரம்!
கண்கள் புழுங்கின கூண்டில். நெஞ்சம்
எண்ணெய் வர்த்தியில் எழுந்தது! கீழே

கவனிக்க வில்லை. கால்தடு மாறி,
கணவன் மேலே கவிழ்ந்தாள். கணவன்
முணுமுணுத் தெழுந்து "மூதேவி என்னடி
ஆள்படுத் திருக்கிறேன் அணைந்ததா உன்விழி?"
என்று, எரிந்து கொண்டே எழுந்தான்.

"நீங்களா இங்கே நித்திரை இடுவது?
இந்த மழையில் எப்படி வந்து
சேர முடிந்தது? சேற்றில் ஊறிய
எருமைப் பத்தைப்போல் ஒருவண்டி சகதி

இருந்திட மாடுபோல் வருமா தூக்கம்!
எழுங்கள் உடனே! முழுநெருப் பெட்டி
இன்றுதான் வாங்கி எங்கோ தொலைத்தேன்.

வெளிச்சம் வேண்டும். வீட்டின் உள்ளே
'சரசர'வென்று வந்த ஓசையை
மின்போல் எழுந்து என்ன என்று
பார்க்க வேண்டாமா? பச்சைக் குழந்தை
என்ன ஆனதோ? எழுங்கள் எழுங்கள்"
என்றாள் மனைவி.

—ஒய்யாரம் குறித்து,
"ஒன்று மில்லை! உன்மன திப்படி
அச்சத் தாலே அதிரலாம் கண்ணே!
சற்று முன்னே, சுண்டெலி ஒன்று
என்மேல் தாவி எழுந்தது! வீட்டின்

உள்ளே வந்து சள்ளை வைத்து
இருக்கலாம்! இந்த வருத்துங் குளிரில்
தனியாய்ப் படுத்தல் தகுமோ கரும்பே?
ஊர் உறைந்து ஒடுங்கிக் கிடக்கும்
இந்த வேளைதான் இனிப்புக் குரியது!"
என்றான்.
—அந்த இளந் தமிழச்சி
பேச்செடுக் காமல், பின்நடப் பவைகளைத்
தன்பொறுப் பாக்க, களைந்த அமைதி
அழகு பிரிக்க, அரும்பாய்ச் சிரித்து;
தாண்டாத வில்விழிச் செங்கண் பாண்டியன்

தாழைமோத் தைத் தோளில் பூத்து;
வெட்சிப்பூ மேலே விளையாடும் அலரிபோல்
வரவுபார்த் திருக்கும் திருநாள் இதயத்துக்
குளிர்ந்த உதட்டில் மணிவாய் பாய்ச்சி
"சஞ்சரிக்கும் இன்பச் சரக்கே!" என்று
வாரினாள் அவனை வாழ்த்தி!

பசலை வானத்து நிசியில் வடிந்த
கண்பனி எடுத்துக் களிப்பில் வைத்துச்
"சீதப் புனலின் சுளையோ" என்று
சந்தனச் சுவடிகள் கன்னத்தை இதழ்கள்

உழுதிட, சித்திரப் பழச்சாற்றுப் பரப்பில்
ஊன்றினான் இன்பம்! விளைந்தாள்! இருமுகம்
இரண்டு நிலவு! ஈரைந்து பூக்கள்!
பாகு பொதிந்த பவளவாய்க் கிழிசல்

மணிநீர் அள்ளும் தாமரைக்காடு!
மைதான விழிகள் மலர்ந்தன! விழுதுக்
கையில் மெய்யேறக் கலந்தனர்! கொஞ்சம்
வையத் தொடங்கிற்று மணப்பேச்சு! குடும்பம்
செய்து கொண்டன திருவிழா "இச்சுகள்!"

பூத்து, அமையாத பூவொன்று சொல்லி
சாத்துவான் வாயை! நங்கை சிரித்து
"நல்ல தமிழன் இசைக்கும் பாடல்
வெல்லம்! இதழின் மணிச்சுளை!" என்பாள்.

"தேன்வரை கின்ற சிங்கார உலகின்
அசையா நெஞ்சம் அமுதின் தேக்கம்!
சுருண்ட நினைவுகள் மதத்தின் பிரசவம்!
இல்லையா கண்ணே!" என்பான். ஒப்புவாள்.

செவ்வை கொடுக்கும் சங்கக் கவிதை
ஒவ்வொரு கூத்தாய் விழுந்தது!–
"திரும்படி" என்று சிரிப்பான். குங்குமக்
கரும்பின் தெளிவே வாழ்க என்று

வாழ்த்து நகர்த்தி மகிழும் பூங்கோதையின்
பலாப் பழத் தீமுகப் படையலின் குளிரிதழ்
வதங்கலில் லாத வாதாம் பழங்கள்.
"இதழ்கள் எங்கே?" என்பாள் வஞ்சி

வரவு கொடுக்க எழும்பும் பாண்டியன்
இரண்டு உதடும் இரத்தினச் சீவல்!

திருநாள் செய்து திரும்பும் "செங்கதிர்"
வரிவரி யாகச் சிரித்து; தங்கம்,
முத்துக் கூளம், மரகதக் குப்பை,
பதும ராகப் பட்டுடை, எல்லாம்

வையத் திற்கு வழங்கும் "பரிசுகள்"
என்று தெரிந்தும், இப்படிக் கதிரை,
துன்பம் அடைத்துச் சிறையில் இட்டது
தன்குறை என்று நொந்து, மேகம்,

செம்மைச் சுவட்டில் மாறிக் கொள்ள,
ஒருதரம் நினைவைத் திருத்தி, சூட்டில்
காந்தும் நிறத்துச் சேலை உரித்து
வங்கப் பருத்தி உடுத்து,
வானில் துள்ளி மன்றல் கொடுத்தது!

தொய்யா உலகத்து நுணுக்கம் பெய்து
மெய்யறம் வகுத்து வாழ்ந்தமூ வேந்தரின்
சிங்க ஆதனத்துத் தமிழரசு போல;
தங்கப் புழுதி நிரவலில், செங்கதிர்
கதிர்க்கை ஊன்றி உதித்தான் கிழக்கில்!

கடலின் இடுப்புபோல் கிடந்த, இல்லத்து
மணியிருட் டரசு மாண்டது! இளமை
இறக்கை தெளித்தது! குழந்தைகள் என்னும்
நீலப் புறாக்கள் கூவின மகிழ்ந்து!

நினைப்பைக் கலைத்து, புறாவின் தொகுதியைத்
தங்கமே என்று தழுவிடப் பெற்றோர்
ஓடினர்! இதய வெளியில், புரட்சி
அமைத்தது குளுமை! அமைந்தது நிலவு!

பனிப்பிடித்தேறும் உதய வர்ணத்தைப்
பார்த்தது கருக்கல்! பார்த்த இளைஞரின்,
கக்கரிச் சதையால் கழுவிய சிரிப்பு
தூற்றல் கொடுத்தது! சிட்டுக் குருவிபோல்

ஓசை பறித்து, ஆசை பிழிந்து,
அம்மா வென்று அழைத்தனர்! பெற்றோர்
சும்மா இருப்பாரா? தாவினர்! புறாக்கள்
ஓவிய மாயின! உலகமும் நகைத்ததே!

என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை!



அம்மா கணினியகம்